

கொலம்பியா
ரிகார்டுகளில்

சென்ட்ரல் ஸ்டுடியோஸ்

வால்மீகி
பாக்கி பாட்டுகள்

T.R.ராஜகுமாரி பாடிய

GE.6304 { பாக்கியசாலி........
அசைந்தோடும் நீரை

GE.6308 :
இப்பொழுதே வருவார்
உள்ளம் உறவாடுதே

G.H.RAO

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்....... மதராஸ் 2.

கல்கி

பொருளடக்கம்

மலர் 5 இதழ் 49	1946 ஜூலை 14	வியய ஆடி 1

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

கத்தி இல்லாமலும் இரத்தம் சிந்தாமலும் சுதந்தரம் பெறப்போகும் பாக்கியம் உலகத்திலேயே முதல் முதலாக இந்தியாவுக்குத்தான் கிடைக்கப் போகிறது என்று நாம் கருதியிருந்தோம்.

ஆனால், இப்போது அந்த பாக்கியத்தை வேறொரு சின்னஞ் சிறிய நாடு அடித்துக் கொண்டு போவதைப் பார்த்தால் நமக்குப் பொறாமை உண்டாகாமல் என்ன செய்யும்?



சென்ற 4-ம் தேதி யன்று, ஒரு சொட்டு இரத்தத்தைக் கூடச் சிந்தாமல் ஒரு பீரங்கியைக் கூடச் சுடாமல், ஒரு தண்டவாளத்தைக் கூடப் பெயர்க்காமல், ஒரு தந்திக் கம்பியைக்கூட வெட்டாமல், அணுகுண்டு ஆயுதம் வைத்திருக்கும் அமெரிக்காவிடமிருந்து பிலிப்பைன் தீவுகள் பூரண சுதந்திரம் வாங்கிக் கொண்டன.

நானூறு வருஷத்துக்கு முன்னால் இந்தமாதிரி தீவுகள் பசிபிக் சமுத்திரத்தில் இருப்பதாகவே உலகத்தில் யாருக்கும் தெரியாது. அங்கு என்ன மாதிரியான ஜனங்கள் வாழ்கிறார்கள் என்பதை யாரும் அறிந்ததில்லை.

கீழ்நாட்டை உத்தாரணம் செய்வதற்காகக் கிளம்பிய வெள்ளைக்காரர்களில் ஒரு பகுதியினரான ஸ்பானிஷ்காரர்கள் மேற்படி தீவின் மண்ணிலே காலடி எடுத்து வைத்ததும், வில்லும் அம்பும் தாங்கிய வேடர்கள் — காட்டு மிராண்டிகள் — தங்களைக் கண்டு பயந்து ஓடுவதைக் கண்டார்கள்!

என்ன ஆச்சரியம்! அந்த வேடர்கள் — காட்டு மிராண்டிகள் — நாகரிகம் என்பதையே இன்னதென்று அறியாத மக்கள் — நானூறு வருஷத்துக்குள்ளாக அதிவேகத்திலே முன்னேறி வந்து அரசியல் முதிர்ச்சி யடைந்து சுதந்திரமும் பெற்று ஒரு குடியரசையும் ஏற்படுத்தி இதர வெள்ளைக்கார வல்லரசுகளைப் போலத் தங்கள் நாட்டைத் தாங்களே ஆளத் தொடங்கி யிருக்கிறார்கள் என்றால் அதை உலக மகா அதிசயம் என்றுதானே சொல்ல வேண்டும்!

சுதந்திரமடைந்த மேற்படி பிலிப்பைன் குடியரசின் முதல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படும் பாக்கியம் பெற்ற டாக்டர் மானுவேல் ரோக்ஸாஸ் அவர்கள் நம்முடைய இந்த இதழ் அட்டையை அலங்கரிக்கும் பாக்கியத்தையும் பெற்றிருக்கிறார்.

கல்கி

மலர் 5 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 49

என்ன சேதி?

இலங்கை சர்க்காருக்கு

சென்ற மூன்று வார காலமாக இலங்கையில் வேலை நிறுத்தம் செய்து வந்த லட்சக் கணக்கான இந்தியத் தொழிலாளர்கள் சம்பந்தமாகப் பம்பாயில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டியார் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

மேற்படி தீர்மானத்திலே இரண்டு முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன. இலங்கை - இந்தியத் தொழிலாளர்கள் தங்கள் வேலை நிறுத்தத்தை உடனே வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டும் என்பது ஒன்று. மற்றொன்று, தற்போது தகராறிலிருந்து வரும் விஷயத்தை விசாரிப்பதற்காக ராஷ்டிரபதி பண்டித நேரு, ராஜாஜி, அரிய நாயகம், ஜி. ராமச்சந்திரன் ஆகிய நால்வரையும் கொண்ட ஒரு கமிட்டி ஏற்படுத்துவது என்பது மற்றொன்றாகும்.

காங்கிரஸின் விருப்பத்திற் கிணங்க இலங்கை - இந்தியத் தொழிலாளர்கள் தங்களுடைய வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்கிக் கொண்டார்கள்.

ஒழுங்காகவும் அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடந்து வந்த மேற்படி வேலை நிறுத்தத்தை நிறுத்தும்படியாகக் காங்கிரஸ் மகாசபை ஏன் சொல்ல வேண்டும்? வேலை நிறுத்தத்தை நிறுத்துவதன் மூலம் சமரசப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்குச் சாதகமான சூழ்நிலை ஏற்படும் என்பதற்காகவே யாகும்.

இதன்மூலம் காங்கிரஸ் சமரச மனப்பான்மையைக் காட்டியிருக்கிறது. தகராறை அமைதியான முறையில் தீர்ப்பதற்கான வழி கோலியிருக்கிறது.

காங்கிரஸ் காட்டிய சமரச மனப்பான்மையை இலங்கை சர்க்கார் திருப்பிக் காட்ட வேண்டியது அவசியம்.

சமரசப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்குச் சாதகமான சூழ்நிலையை அவர்களும் உடனே ஏற்படுத்த வேண்டும். அதாவது, இலங்கை காவல்மியர் எஸ்டேட்டிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட 400 இந்தியக் குடும்பங்களை மறுபடியும் அங்கே குடியேற்ற வேண்டும்.

கவலை நீங்கிற்று

சென்னை மாகாணத்துத் தபால் இலாகா ஊழியர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறோம்.

"ஸார்! தபால்!" என்ற குரலுக்கு இம்மாதம் 11-ம் தேதியிலிருந்து ஆபத்து நேரும் போல இருந்தது. நம்மைப் பொறுத்தவரை, ஆயிரக் கணக்கான சந்தாதாரர்கள் "கல்கி"யை எதிர்பார்த்து ஏமாறுவார்களே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். அதிர்ஷ்ட வசமாக அந்த பயங்கரமான 11-ம் தேதி நிம்மதியாக யாதொரு விசேஷமும் இல்லாமல் சென்று விட்டது. சென்னை மாகாணத் தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுவிட்டார்கள்.

தொழிலாளர் தங்களுடைய நிலைமையை உயர்த்திக் கொள்வதற்காக நடத்தும் எந்தப் போராட்டத்திலும், தொழிலாளரின் கட்சியை ஆதரிப்பதே நமது இட்டமான கொள்கை. ஆயினும், தபால் தொழிலாளரின் வேலை நிறுத்த யோசனையை நம்மால் ஆதரிக்க முடியவில்லை. இதற்கு முக்கிய காரணம், தபால் தொழிலாளர்கள் தங்களுடைய குறைகளையும் தங்கள் கட்சியின் நியாயத்தையும் சரியானபடி எடுத்துச் சொல்லி விளம்பரப் படுத்தவில்லை. பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்ட நமக்கே அவர்களுடைய குறைகள் இன்னவை யென்பது தெரியவில்லை

யென்ருல், பொது ஜனங்களுக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாததில் அதிசயம் ஏதுவும் இல்லை.

ரயில்வேத் தொழிலாளர் மேற்படி விஷயத்தில் தக்க முன் வேலை செய்திருந்தார்கள். அவர்கள் வேலைநிறுத்தம் செய்ய உத்தேசித்த தேதிக்குப் பல மாதங்களுக்கு முன்பே தங்களுடைய குறைகள் இன்னின்ன வென்பதை நன்ருக விளக்கிப் பொது ஜனங்களின் அபிமானத்தையும் ஆதரவையும் பெற்றுக் கொண்டார்கள்.

தவிரவும், ரயில்வேத் தொழிலாளர்களிடத்தில் காணப்பட்ட ஒற்றுமை தபால் ஊழியர்களிடம் காணப் படவில்லை. தபால் தொழிலாளிகளின் சங்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியான அபிப்பிராயங்களை வெளியிட்டு வந்தன. அவர்களுடைய தலைவர்களோ, ஒவ்வொரு விதமான யோசனை சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதன் பலனுக சில மாகாணங்களில் வேலை நிறுத்தம் நடக்கிறது; சில மாகாணங்களில் நடக்கவில்லை.

தபால்காரர்கள், ரயில்வேக்காரர்கள் போன்ற பெரிய ஸ்தாபனங்களைச் சேர்ந்த பொதுஜன ஊழியர்கள் நடத்தும் போராட்டமானது வெற்றியடைய வேண்டுமானல் அதற்கு ஒற்றுமையும் கட்டுப்பாடும் அவசியமாகும். இல்லாவிடில் பொது ஜனங்களுக்கும் கஷ்டம், வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கும் கஷ்டம் என்பதைத் தவிர யாருக்கும் ஒரு பிரயோஜனமும் ஏற்படாது. சென்னை மாகாணம் இத்தகைய கஷ்டத்தில் மாட்டிக் கொள்ளாமல் தப்பித்ததைக் குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

ஆசைக்கு அளவில்லை !

நூல் ஆலைகளையும் துணி ஆலைகளையும் மில் முதலாளிகளிடமிருந்து விடுவித்து எல்லா ஆலைகளையும் சர்க்காரே எடுத்து நடத்தவேண்டும் என்று நாம் வற்புறுத்திக் கூறியிருக்கிறோம். இந்த யோசனையைத் தமிழ் நாடெங்கும் நடந்திருக்கும் பல பொதுக் கூட்டங்களில் ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிருர்கள்.

மேற்படி யோசனைக்கு எல்லாவற்றிலும் முக்கியமான பேராதரவு மில் முதலாளிகளிடமிருந்தே கிடைத்திருக்கிறது !


தற்போது ஆலை நூல் - ஆலைத் துணி இவற்றின் விலையையும் விநியோகத்தையும் கட்டுப்படுத்தும் உரிமை பெற்றுள்ள டெக்ஸ்டைல் கண்ட்ரோல் போர்டைப் பற்றி நேயர்களுக்குத் தெரியும். முக்கால் வாசிக்குமேல் மில் முதலாளிகள் அடங்கிய ஸ்தாபனம் இது.


சென்ற வாரத்தில் மேற்படி டெக்ஸ்டைல் கண்ட்ரோல் போர்டார் தற்போதுள்ள ஜவுளி விலை உயர்வு போதாதென்று இன்னும் கொஞ்சம் துணி விலையை உயர்த்தத் தீர்மானித்திருக்கின்றனர். முரட்டுத் துணிக்கு ரூபாய்க்குப் 15 தம்பிடியும் நடுத்தரமான துணிக்கு ரூபாய்க்குப் பன்னிரண்டு தம்பிடியும் மிகவும் நுண்ணிய ஆடைகளுக்கு ரூபாய்க்கு ஆறு பைசாவும் உயர்த்த வேண்டுமென்று தீர்மானித்திருக்கிருர்கள்.


தீர்மானிக்கட்டும், நன்ருகத் தீர்மானிக்கட்டும், தர்மப் பிரபுக்கள் ! ரூபாய்க்குப் பன்னிரண்டு தம்பிடி என்ன, பதினைந்து தம்பிடி என்ன ! ரூபாய்க்கு ரூபாயே உயர்த்தினாலுங்கூடத் தட்டிச் சொல்வதற்கு யார் இருக்கிருர்கள் ?

இந்திய மில் முதலாளிகள் யுத்தகாலத்திலே கோடி கோடி லாபம் சம்பாதித்தார்கள். யுத்தகாலத்தைக் காட்டிலும் அதிகமாக லாபம் அடிப்பதற்கு இப்போது வசதி இருக்கிறது. ஏனெனில், இந்த வருஷத்திலிருந்து அதிக லாப வரி கிடையாது. அப்படியிருந்தும், ஏழை எளிய மக்களின் தலையிலே கையை வைக்கும் முறையில் ஜவுளி விலையை உயர்த்த அவர்கள் தீர்மானித்திருப்பது அவர்களுடைய பேராசைக்கு எல்லையில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

ஆலைகளைச் சர்க்காரே சொந்தத்தில் எடுத்து நடத்தும் வரை, மில் முதலாளிகளின் பேராசையை ஒழிப்பதற்கு வழி இல்லை. ஏழை மக்களுக்கு விமோசனம் பிறப்பதற்கும் மார்க்கம் இல்லை.


பிரிட்டிஷ் தூது கோஷ்டியாரும் வைஸ்ராய் வேவலும் தங்கள் வாக்குறுதியை மீறி முஸ்லிம் லீக்கைக் கை விட்டு விட்டதாக ஜனாப் லியாகத் அலிகான் கடுமையாகப் புகார் கூறி யிருக்கிறார்.
வேவலின் காதல் கடிதம்
வாழ்க்கையில் வெற்றி பெறுவது எப்படி?


தென்னாப்பிரிக்கா வெள்ளைக்காரர்கள் செய்து வரும் அக்கிரமங்களைக் குறித்து மகாத்மா காந்தி "மேல் நாட்டு ஜனநாயகம் தென்னாப்பிரிக்காவில் தன்னைத்தானே புதைத்துக் கொள்ள ஆழமாகக் குழி தோண்டி வருகிறது" என்று சொன்னார்.
ஜெனரல்ஸ்மட்ஸ்


பண்டித ஜவாஹர்லால் நேருவின் தலைமையில் புதிய காங்கிரஸ் காரியக் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அதில் பழைய மாபெரும் தலைவர்களுடன் புதிய வாலிபத் தலைவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள்.
ஸ்வராஜ் ஸ்பெஷல்
புறப்படுவதற்குத் தயார்
திறமை வாய்ந்த புதிய விமானிகள் ஓட்டுவார்கள்.

ஜே ஹிந்த்!

ஆயிரம் வெள்ளைக் காக்கைகள் சேர்ந்தாற்போல் ஆகாசத்தில் பறந்தன!

இமயமலை எழுந்திருந்து வந்து சென்னை சென்டிரல் ஸ்டேஷன் உச்சியில் உட்கார்ந்து கேதார கௌள ராகத்தை ஆனந்தமாகப் பாடிற்று. பிரதம மந்திரி பிரகாசம் அந்த அற்புத கானத்தைக் கேட்டுப் பரவசமாகத் தலையை ஆட்டிக்கொண்டிருந்தார்!!

அமெரிக்காவிலே தயாரான அணுகுண்டு, ரிக்ஷா வண்டியில் ஏறிக்கொண்டு புது டில்லிக்கு வந்து "திராவிடஸ்தான் ஒழிக! பாகிஸ்தான் வாழ்க!" என்று கோஷம் செய்தது. அதைக் கேட்ட ஸ்ரீமதி அருணா ஆஸப் அலி, "அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமென்பதில்லையே!" என்று கர்ஜித்தார்.

ஒரு நாளைக்கு உலகத்திலுள்ள தினசரிப் பத்திரிகை எல்லாவற்றிலும் பொய்க் கலப்பே இல்லாமல் உண்மையான செய்திகள் மட்டுமே வெளியாயின! இதைக் கேட்டவுடனே மகாத்மா காந்தி காங்கிரஸின் நாலணா அங்கத்தினராகச் சேர்ந்தார்!!

மேலே கூறியவை போன்ற சம்பவங்கள் நேரிட்டால் நமக்கு எவ்வளவு பரம ஆச்சரியம் உண்டாகுமோ, அதைக் காட்டிலும் மிகப் பரம ஆச்சரியம் உண்டாகும்படியான காரியம் ஒன்று சென்ற வாரத்திலே நிகழ்ந்தது.

பம்பாயிலே கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டியாரால் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

அந்தத் தீர்மானம் ஒரே ஒரு வாக்கியம் அடங்கியது!

அந்த வாக்கியமானது 37 வரி, அல்லது 59 வரி, அல்லது 82 வரி கொண்டதல்ல; 970 வார்த்தை, அல்லது 2865 வார்த்தை, அல்லது 7923 வார்த்தைகள் அடங்கியதல்ல.

ஒரே ஒரு வாக்கியத்தினால் அமைந்த தீர்மானம்; பதினைந்து வார்த்தைக்கு உட்பட்ட தீர்மானம்.

அந்த அதிசயமான தீர்மானம், "ஜூன் மாதம் 26வ காரியக் கமிட்டி செய்த தீர்மானம் இதன் மூலம் ஊர்ஜிதம் செய்யப்படுகிறது" என்பதுதான்!

அதுவும் பண்டித ஜவாஹர்லால் நேரு தலைமை வகித்த அ. இ. கா. கமிட்டி கூட்டத்தில் இத்தகைய ஒரே வாக்கியத் தீர்மானம் வந்தது.

தீர்மானத்தைப் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் எல்லாம் சுருக்கமாக இரண்டே நாளில் முடிவடைந்தன.

தீர்மானத்தின்மேல் வோட்டு எடுக்கப்பட்டுப் பெரும்பான்மை வோட்டுகளால் நிறைவேறியது.

தென்னாப்பிரிக்கா இந்தியர் சத்தியாக்கிரஹத்தைப் பற்றிய இன்னும் ஒரே ஒரு தீர்மானம் நிறைவேறியதும் கூட்டம் இனிது முடிவடைந்தது.

அ. இ. கா. கமிட்டி அங்கத்தினர் அவரவர்களும் நல்ல வேளையில் ஊருக்குத் திரும்பினார்கள்.

வந்தேமாதரம்! ஜே ஹிந்த்!!

* * *

காரியக் கமிட்டியின் தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கீகரித்தபோது முக்கியமாகக் காரியக் கமிட்டியின் இரண்டு நடவடிக்கைகளை ஆமோதித்தது. அவற்றில்,

1. பிரிட்டிஷ் தூது கோஷ்டியின் நீண்ட காலத் திட்டத்தை, அதாவது அரசியல் நிர்ணய சபையை ஒப்புக்கொண்டு அதற்குப் பிரதிநிதிகளை அனுப்ப இசைந்தது ஒன்று;

2. பிரிட்டிஷ் தூது கோஷ்டியின் இடைக்காலத் திட்டத்தை, அதாவது இண்டரிம் கவர்ன்மெண்டை நிராகரித்து அதில் சேர மறுத்தது இரண்டாவது.

காரியக் கமிட்டியைச் சேர்ந்த நமது அரும் பெரும் தலைவர்களின் பேற்படி இரண்டு காரியங்களும் மிகச் சிறந்த இராஜதந்திர நடவடிக்கைகள் என்று சொல்ல வேண்டும். அவை தேச நன்மைக்கும் தேசிய சுதந்திரத்துக்கும் உகந்த காரியங்களுமாகும்.

* * *

பிரிட்டிஷ் தூதுகோஷ்டியின் அரசியல் நிர்ணய சபைத் திட்டத்தில், காங்கிரஸ் மகா சபை சென்ற 25 வருஷ காலமாக நடத்தி வந்த சுதந்திரப்

போரின் மகத்தான வெற்றி அடங்கியிருக்கிறது. மேற்படி திட்டத்தில் பின்வரும் மூன்று முக்கியமான கொள்கைகள் பிரிட்டிஷாரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன :—

1. இந்தியாவின் பரிபூரண சுதந்திர உரிமை ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

2. இந்திய மக்களின் பிரதிநிதிகள் தங்களுடைய சுயராஜ்ய அரசியல் அமைப்பைத் தாங்களே நியமித்துக் கொள்ளும் சுயநிர்ணய பாத்தியம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது!

3. இந்தியா ஒரே தேசம். இந்தியா முழுவதற்கும் ஒரே ஐக்கிய சர்க்கார் இருந்தாக வேண்டும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது (அதாவது பாகிஸ்தான் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருக்கிறது.)

இத்தகைய மூன்று உறுதியான கொள்கைகளைக் கொண்ட திட்டத்தைக் காங்கிரஸ் மறுதளிப்பதற்கு ஒருவித நியாயமும் இல்லை; அப்படி மறுப்பதனால் நன்மையும் இல்லை.

திட்டத்தில் சில சில்லறைக் குறைபாடுகள் இருப்பது உண்மையே. அவற்றைச் சரியான முயற்சி செய்து நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

உண்மையில், மிகவும் முக்கியமான குறை என்று கருதப்பட்டது ஏற்கெனவே நீங்கி விட்டது.

மாகாண சட்டசபைகளில் உள்ள ஐரோப்பிய அங்கத்தினர்களுக்கு அரசியல் நிர்ணய சபைக்குப் பிரதிநிதி அனுப்பும் உரிமை உண்டு என்று சிலர் சொன்னார்கள்.

இது நியாயமில்லை, ஐரோப்பியர்களுக்கு மேற்படி உரிமை அளிப்பது இந்திய சுயநிர்ணயத்துக்குப் பங்கம் என்று கருதப்பட்டது.

முக்கியமாக, வங்காளம்—அஸ்ஸாம் மாகாணங்களில் ஐரோப்பியர்களுக்கு மேற்படி உரிமை இருப்பது ஆபத்தாக முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனவே, காந்தி மகான் மிகக் கடுமையான வார்த்தைகளில் அந்த ஏற்பாட்டைக் கண்டித்தார்.

அதன் பலனாக வங்காள-அஸ்ஸாம் ஐரோப்பிய எம். எல். ஏ.க்கள் மேற்படி உரிமையைத் தாங்கள் உபயோகப்படுத்துவதில்லை என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்கள்.

இவ்விதமே மற்றுமுள்ள சிறு குறைகளையும் இராஜ தந்திரத்தினாலும் உறுதியான பிரயத்தனத்தினாலும் நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

மொத்தத்தில் அரசியல் நிர்ணய சபைத் திட்டமானது காங்கிரஸுக்கு ஒரு மகத்தான வெற்றி என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

ஆகையினாலேதான் தீர்மானத்தை எதிர்த்தவர்களைப் பார்த்து மௌலானா ஆஸாது அவர்கள், "எவ்வளவோ பெரும் போராட்டம் நடத்திக் கைமேல் வெற்றி கிடைத்திருக்கிறது. கிடைத்த வெற்றியைத் தோல்வியாகச் செய்து கொள்ளாதீர்கள்!" என்று எச்சரிக்கை செய்தார்.

போராட்டத்தில் வெற்றியும் தோல்வியும் ஏற்படுவது இயல்புதான். தோல்வி ஏற்பட்டால் அதற்காக வருத்தப்படக் கூடாது; சோர்வடையக் கூடாது. மேலும் போராட்டத்தை நடத்த உற்சாகத்துடன் பிரயத்தனப்பட வேண்டும்.

ஆனால் போரின் வெற்றி கிடைத்த பிற்பாடும் அதை வெற்றி என்று தெரிந்து கொள்ளாமல் தோல்வி அடைந்ததாக எண்ணிக்கொண்டு ஒருவன் வருத்தப்பட்டால் அவனைக் காட்டிலும் துரதிர்ஷ்டசாலி ஒருவரும் இல்லை என்றே சொல்லவேண்டும்.

நல்ல வேளையாக, நமது காங்கிரஸ் காரியக் கமிட்டி தலைவர்களும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினரில் பெரும்பாலோரும் இந்தத் தடவை வெற்றியை வெற்றி என்பதாக உணர்ந்து கொண்டார்கள்.

* * *

அரசியல் நிர்ணய சபை காங்கிரஸுக்கு மகத்தான வெற்றியாதலின் அதை ஒப்புக் கொண்டது சரி என்பது மட்டுமன்று. இந்தத் தடவை அதை ஒப்புக் கொள்ளாமல் நிராகரித்திருந்தால் பெரியதொரு விபரீதம் நேர்ந்திருக்கும். அது இராஜதந்திர ரீதியான பெரியதொரு மௌடீகக் காரியமாயிருந்திருக்கும்.

இடைக்கால திட்டமாகப் பிரிட்டிஷ் தூதர்கள் வெளியிட்ட இண்டரிம் கவர்ன்மெண்டு பிரேரணையைக் காங்கிரஸ் நிராகரித்து விட்டதல்லவா?

அதற்குச் சரியான காரணங்கள் உண்டு என்பதை முந்திய இதழிலேயே விவரமாகக் கூறியிருக்கிறோம்.

அந்த இடைக்காலத் திட்டத்தின்படி எட்டு கோடி முஸ்லீம்களும் 24 கோடி ஹிந்துக்களும் சமம் என்ற அநீதமான ஏற்பாடு நிலை பெறுகிறது. காங்கிரஸ் மகா சபை தேசத்தின் பிரதிநிதி சபை என்ற உரிமையை இழக்க வேண்டியதாகிறது. காங்கிரஸுக்கும் தேச சுதந்

நிரத்திற்கும் உண்மையாக நடந்த தேசிய முஸ்லிம்களைக் காங்கிரஸ் கைவிட வேண்டியதாகிறது. இதெல்லாம் ரொம்பப் பெரிய குறைகள். எனவே, இடைக்கால சர்க்கார் யோசனையை நிராகரித்தது ரொம்ப சரி.

ஆனால் இடைக்கால சர்க்காரை நிராகரித்ததோடு நில்லாமல் அரசியல் நிர்ணய சபையையும் நிராகரித்திருந்தால் என்ன நடந்திருக்கும் தெரியுமா?

இந்தியா கவர்ன்மெண்டு, முழு முஸ்லிம் லீக் கவர்ன்மெண்டாக ஆகிப் போயிருக்கும். தற்சமயம் இந்தியா முழுவதிலும் ஜின்னா சாயபுவின் யதேச்சாதிகார ஹிட்லர் ஆட்சி நடந்து கொண்டிருக்கும். அப்புறம் அந்த ஸ்தானத்திலிருந்து அவரை அசைப்பது இலேசான காரியமல்ல.

நியாயமாகவோ அநியாயமாகவோ அதிகாரம் ஒருவரிடம் போய்விட்டால் அதை மறுபடியும் கைப்பற்றுவது எவ்வளவு சிரமசாத்தியம் என்பதைத் நான் கண் முன்னால் தினந்தோறும் பார்த்துக் கொண்டு வருகிறோமே? பிரிட்டிஷ் ஆட்சியை அசைப்பது இலேசாக இருக்கிறதா?

அப்படிப்பட்ட விபரீத சம்பவம் நேராமல் நமது தலைவர்கள் நம்மைக் காப்பாற்றினார்கள். அவர்கள் நன்றாயிருக்கட்டும்! அவர்களின் பெயர்கள் என்றென்றைக்கும் இந்தியாவின் சுதந்திர சரித்திரத்தில் பொன்னெழுத்தில் பொறிக்கப்பட்டு விளங்கட்டும்!

சென்ற நாலு வருஷமாக நடந்து வந்த அரசியல் சதுரங்கத்தில் முதன் முதலாக ஜனாப் ஜின்னா இந்தத் தடவைதான் தோல்வியடைந்தார் என்று சொல்ல வேண்டும். அத்தகைய தோல்வி அரசியல் நிர்ணய சபையை நமது மாபெருந் தலைவர்கள் ஒப்புக்கொண்டதினால்தான் ஜனாப் ஜின்னாவுக்கு நேர்ந்தது. எனவே காரியக் கமிட்டியின் மேற்படி காரியத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் ஊர்ஜிதம் செய்ததினால் தேசத்தின் மகத்தான நன்றிக்குப் பாத்திரமானார்கள்.

* * *

தீர்மானத்துக்கு எதிர்ப்பு இருக்கத்தான் இருந்தது. ஸ்ரீ ஜயப்பிரகாச் நாராயணர் முதலிய வீர புருஷர்களும் ஸ்ரீமதி அருணா ஆஸப் அலி முதலிய தீவிர நாரீமணிகளும் எதிர்த்தார்கள்.

இவர்களுடைய அர்த்தமற்ற எதிர்ப்புக்கு அந்தப் பழைய ஐரிஷ்காரனுடைய கதையைத்தான் உதாரணமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது.

நடுக்கடலில் மூழ்கிய கப்பலிலிருந்து ஓர் ஐரிஷ்காரன் தப்பிப் பிழைத்து நீந்திச் சென்று முன்பின் தெரியாத ஒரு தீவிலே கரையேறினான்.

கரையேறிய பிறகு அவன் சந்தித்த முதல் மனிதனைப் பார்த்து, "ஐயா! இந்தத் தீவிலே கவர்ன்மெண்டு இருக்கிறதா?" என்று கேட்டான்.

"இருக்கிறது" என்றான் அந்தத் தீவைச் சேர்ந்த மனிதன்.

"அப்படியானால் நான் அதற்கு எதிர்க் கட்சி!" என்றான் கரையேறிய ஐரிஷ்காரன்.

ஐரிஷ்காரர்கள் பல நூறு வருஷ காலம் பிரிட்டிஷாரோடு போராடிப் போராடிச் சர்க்காரை எதிர்ப்பது என்பது அவர்களுடைய இரத்தத்தில் கலந்த இயற்கைப் பழக்கமாகி விட்டது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காக மேற்படி கதையைச் சொல்வார்கள்.

அந்தக் கதை இந்தக் காலத்து ஐரிஷ்காரர்களுக்குப் பொருந்தாது.

ஆனால் அ. இ. கா. கமிட்டியில் காரியக் கமிட்டித் தீர்மானத்தை எதிர்த்த கோஷ்டிக்குப் பொருந்துகிறது.

அவர்களுடைய அந்த எதிர்ப்புக்கு, "எதுவாயிருந்தாலும் எதிர்த்தேயாக வேண்டும்" என்ற பிடிவாதத்தைத் தவிர வேறு அறிவுக்குகந்த காரணம் எதுவும் அவர்களுடைய பேச்சுக்களிலிருந்து வெளியாகவில்லை.

"இத்தனை நாளும் நீங்கள் சொன்னதை நாங்கள் கேட்டோம்; இனிமேல் நாங்கள் சொல்வதை நீங்கள் கேளுங்கள்!" என்று ஸ்ரீமதி அருணா ஆஸப் அலி கூறினார்.

கன்றுக்குட்டி பசுமாட்டைப் பார்த்து, "இத்தனை நாளும் நான் உன்னிடம் பால் குடித்தேன்; இனிமேல் என்னிடம் நீ பால் குடி!" என்று சொன்னால் அதில் ஏதாவது அர்த்தம் உண்டா?

நல்லவேளையாக அ. இ. கா. கமிட்டியில் இப்படி எதிர்ப்புக்காகவே எதிர்ப்புச் செய்யும் கோஷ்டியார் சுமார் ஐம்பது பேர்தான் இருந்தார்கள் என்பதும், மற்ற 203 அங்கத்தினர் தங்கள் பொறுப்பை உணர்ந்து காரியக் கமிட்டியை ஆதரித்தார்கள் என்பதும் மிகவும் திருப்திகரமான விஷயம்.

இனிமேலும், இந்தியாவில் நிரந்தரமான சுதந்திர அரசாங்கம் ஸ்தாபிக்கப்படும் வரையில், இத்தகைய தீர்க்க புத்தியுடனும் இராஜ தந்திரத்துடனும் இந்தியாவின் மாபெருந்தலைவர்கள் தேச காரியங்களை நடத்த வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

★ புது மணம் புரிந்த கணவன் பம்பாயில் உத்தியோகம் செய்கிறான். மனைவி தமிழ் நாட்டில் தன் தந்தையின் வீட்டில் இருக்கிறாள். தபால்காரர் வேலை நிறுத்தம் செய்யப் போவதாகக் கேள்விப் பட்டு அவளுக்குப் பெருங் கவலை உண்டாகிறது.

அநியாயம்! அடுக்காது!

1. "அம்மா, லெட்டர்!" என்றழைக்கும் — தபால்
அருணாசலத்தின் குரலழகை
கும்பாச் சொன்னா லாயிடுமோ? — அந்தச்
சுகத்தைச் செவிகள் மறந்திடுமோ?

2. வாசலும் உள்ளுமாய் நடந்திடுவேன் — தபால்
வருமெனும் உறுதி இருந்தாலும்
ஆசையினால் மிகப் பதைபதைத்து — வீணே
அலட்டிக் கொள்ளும் என துள்ளம்

3. உறையை வாங்கி உடைப்பதற்குள் — என்
உயிரும் உடலும் துடிதுடிக்கும்
பரபரவென்று பிரித்ததனை — நான்
பார்ப்பேன் கைகள் நடுநடுங்கும்

4. "கண்ணே! மணியே! கற்கண்டே! — என்
காதற்கினியே!" எனத்தொடங்கி
எண்ணத் தினைறும் முத்தங்கள் — அவர்
எழுத்தின் கொழுந்து எனக்களிப்பார்!

5. என்னை நினைத்தே எண்ணியெண்ணி — சதா
ஏங்கித் தவித்து உருகுறாராம்
அன்னை மென்பதே கிடையாதாம் — தினம்
அல்வா பூரிதான் சாப்பாடாம்!

6. உடல்தா னங்கே இருக்கிறதாம் — அவர்
உயிரெல்லாம் இவ் விடந்தானாம்!
கடலில் ஆறு கலந்ததுபோல் — என்னைக்
கண்டதும் காதல் கொண்டாராம்!

7. திரும்பத் திரும்பப் படித்திடுவேன் — சற்றும்
திகட்டாதெனக்கு அவர்கடிதம்
கருப்பு மணியைக் கோத்ததுபோல் — அவர்
கையெழுத் தழகை என்சொல்வேன்!

8. வாரம் நான்கு கடிதாக — எனக்கு
வருவது என்றும் தவறாது
நானும் பதிலாய்த் தந்தியைப்போல்
நாளுக்கொன்று எழுதிடுவேன்

9. பார்த்து மாதம் பத்தாச்சு — அவர்
பம்பாய்க் கம்பெனி மானேஜர்
காத்திருக்கேன் நான் தினந்தோறும் — வரும்
கடிதம் ஒன்றே உயிர்நாடி

10. இனிமேல் லெட்டர் கிடையாதாம்! — அங்கே
என்னமோ 'ஸ்ட்ரைக்'காம் புரியவில்லை!
அநியாயம் இதை யார்பொறுப்பார்? — தபால்
அருணாசலத்தையே கேட்டிடுவேன்

11. பொறுக்க முடியா அக்கிரமம்! — உயிர்
போயிடும் லெட்டர் இல்லை யெனில்
அடுக்கா திந்த 'ஸ்ட்ரைக்'என்று — நான்
அருணாசலத்திடம் சொல்கிறேன், பார்!

— காட்டூர் கண்ணன்.

அனசூயாவின் எச்சரிக்கை

டி. ஆர். ராமஸ்வாமி

நேயில வியாபார அபிவிருத்தி சங்கத்திலிருந்து சாம்பசிவன் தனக்குத் தீபாவளி போனஸ் கிடைத்த சமாசாரத்தை மனைவியிடம் சொல்லவில்லை. அவன் அந்தப் பணத்திற்கு ஒரு ஜதை 'சூட்' தைத்துக் கொண்டான்.

தீபாவளி யன்று காலை ஒன்பது மணிக்குச் சலவைக் கல் போட்ட மேஜையொன்றைச் சில ஆட்கள் கொண்டு வந்தார்கள். அது கூடத்தில் வைக்கப்பட்டதைப் பார்த்த அவன் மனைவி அனசூயா, "இந்த மாதிரி உபயோகமற்ற சாமான்களுக்கு மட்டும் பணம் எங்கிருந்தோ முளைத்து விடுகிறது. தீபாவளிக்குப் பட்டுப் புடவை வாங்கக் கிடைக்கிறதில்லை" என்று கோபமடைந்த பாவனையுடன் தரையைப் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

வழக்கம் போல் பத்து மணிக்கு "சாப்பிட வாருங்கள்!" என்று சாப்பாட்டு அறையிலிருந்தே கூப்பிட்டாள்.

"இங்கேயே கொண்டு வா!" என்று கூடத்திலிருந்து கணவன் பதில் சொன்னதைக் கேட்டு, ஆச்சரியப்பட்டுக் கூடத்திற்கு வந்தாள். அங்கே வேறு யாரோவென்று நினைக்கும்படி மேல்நாட்டு உடை தரித்து அந்த மேஜைக்கருகில் சுவரை நோக்கிப் புன்முறுவலுடன் உட்கார்ந்திருந்த கணவனைப் பார்த்து அனசூயா திகைத்து நின்றாள்.

சாம்பசிவன் அவளைப் பார்த்து, "நன்றாயிருக்கிறதா?" என்று கேட்டுவிட்டு, "இன்று நமது பம்பாய் ஆபீஸ் மானேஜர் துரை ஸ்மித்தும் அவருடைய மனைவியும் இங்கே வருகிறார்கள். அவர்களுக்கு என்னுடைய ஆபீஸிலே சாயந்திரம் தேயிலைப் பானத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்" என்று பெருமையுடன் சொன்னான். அவள் தான் நினைத்தபடி தனக்குப் புடவை வாங்காததைப் பற்றிக் குற்றம் கூறாமல் தன்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டேயிருப்பதைக் கண்டு, "தீபாவளிக்குப் புடவை வாங்கவில்லையென்று விசனப்படாதே! சம்பளம் உயர்ந்தால் உனக்கு எத்தனையோ புடவைகள் வாங்க முடியுமல்லவா?" என்றான்.

"இந்த 'சூட்'டில் நீங்கள் அதிகமாய்ச் சோபிக்கத்தான் செய்கிறீர்கள். ஆனால் அதனாலேயே மானேஜர் உமது சம்பளத்தை உயர்த்தி விடுவாரா?" என்று கேட்டாள்.

அதற்குச் சாம்பசிவன் அவசரமாய்ச் சாப்பிட்டுக் கொண்டே, "சம்பள உயர்வு கிடைக்காமற் போனாலும், இருக்கிற வேலை போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஐரோப்பிய ஆபீசருக்கு எதிரில் மடிசஞ்சி மாதிரி போய் நின்றால் அவன் ஒருவேளை என்னைச் சாமர்த்திய மற்றவனென்று வேலையிலிருந்து நீக்கி விடலாம். அப்பொழுது நீ உன் அப்பாவின் அகத்திற்குப் போக வேண்டி வரும்" என்றான்.

அதற்கு அனசூயா, "எனக்காகக் கவலைப்படாதீர்கள். நீங்கள் எந்த நிலையிலிருந்தாலும் நான் உங்கள் சகதர்மிணியாய் வாழக் கடமைப்பட்டவள்" என்றாள்.

சாம்பசிவன், "இந்த மனோ நிலை எப்பொழுதும் ஸ்திரமாயிருக்கக் கடவுள் அருள் புரிவாராக. விசேஷ ஆடையின் அவசியம் மகான்களுக்கு இல்லை. மகாத்மா காந்தி போன்ற பெரியோர்கள் எப்படியாவது இருக்கலாம். ஆனால் என்னைப் போன்ற சாதாரண மனிதருக்கு நாகரிகமான ஆடை மனதுக்குத் தன்னம்பிக்கையும் தைரியமும் தரும்" என்று சொல்லிச் சாப்பிட்டுக் கையலம்பி எழுந்திருந்து, "அடாடா! 'சூட்' தைக்கச் சொன்னபொழுது கைக்குட்டை தைக்கச் சொல்ல மறந்து விட்டேன். உன்னுடைய கைக்குட்டையை ஒரு நாலு நாளைக்கு இரவல் கொடுப்பாயா?" என்று கேட்டான்.

அவள் மடித்துக் கொடுத்த கைக்குட்டையை வாங்கிக் கொண்டு ரிக்ஷா வண்டி ஏறி ஆபீசுக்குப் புறப்பட்டான்.

மானேஜர் மிஸ்டர் ஸ்மித்தும், அவர் மனைவி மிஸஸ் ஸ்மித்தும், இன்ஸ்பெக்டர் சாம்பசிவனும் மேஜையருகில் உட்கார்ந்து கொண்டிருந்தனர். சாம்பசிவன் பிஸ்கோத்துகளும்

சென்ற இதழில் வெளியான காலேஜ்ப் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்:
பி. கே. கிருஷ்ணமூர்த்தி, 50, முத்துமாரிச் செட்டித் தெரு, ஜி. டி. சென்னை.

பழங்களும் சம்பாதித்து ஒரு ஹோட்டல் பையனைக் கொண்டு பரிமாற ஏற்பாடு செய்திருந்தான். மானேஜரின் மனைவி பழம் நறுக்குகையில் தவறி விரலை வெட்டிக் கொள்ளவே அதிலிருந்து ரத்தம் வர ஆரம்பித்தது. மானேஜர் தமது கைப்பெட்டியைத் திறந்து அதிலிருந்து 'உடன் சிகிச்சைப் பெட்டி'யை எடுத்து மருந்து பூசிப் பஞ்சு வைத்துக் கட்டச் சுருள் துணி அதில் இல்லாமல் போனபடியால் சாம்பசிவன் தன்னுடைய கைக் குட்டையைக் கிழித்துக் கட்டினான். கைக்குட்டை ஓரத்தில் "அனசூயா கே.ஆர்" என்ற எழுத்து சிவப்பு நூலால் தைத்திருப்பதைப் பார்த்து மிஸஸ் ஸ்மித், "இந்தப் பெயருடையவர் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று சாம்பசிவனைப் பார்த்துக் கேட்டாள்.

சாம்பசிவன் "என் மனைவிதான்" என்றான். மிஸஸ் ஸ்மித் "குழந்தைகளுண்டா?" என்று விசாரித்தாள்.

சாம்பசிவன் "இல்லை" என்று சொல்லி "ஏன், என்னை இவ்வளவு தூரம் விசாரிக்கிறான்?" என்று ஆச்சரியப்பட்டான். தேயிலைப் பானம் முடிந்ததும் மானேஜரும் அவர் மனைவியும் ஊர் சுற்றப் புறப்பட்டார்கள். சாம்பசிவன் கணக்குப் பார்த்துவிட்டு வீட்டுக்கு வரச் சாயந்திரம் மணி ஆறு ஆயிற்று.

வீட்டுக் கூடத்தில் அனசூயா யாருடனோ பேசிக் கொண்டிருப்பது கேட்டது. புதுக் குரல், மிஸஸ் ஸ்மித்தின் குரல்போலிருந்தது. "உள்ளே வரலாமா?" என்று கேட்டாள். மிஸஸ் ஸ்மித் உள்ளே வரச் சொன்னான். அவள் அவனைப் பார்த்து, "அனசூயா என்னுடைய பழைய மாணவி. அவள் வகுப்பில் முதல் பெண். நல்ல நடத்தைக்கு ஒவ்வொரு வகுப்பிலும் பரிசு வாங்குவாள். அவளை நீர் மனைவியாயடைந்ததற்கு என் வாழ்த்துக்கள்!" என்றாள். பிறகு அனசூயாவைப் பார்த்து, "நீயும் அதிர்ஷ்டசாலி; என்னுடைய கணவருக்கு மிஸ்டர் சாம்பசிவன் மேல் மிகவும் நல்ல அபிப்பிராயம் உண்டாயிருக்கிறது. அவன் மற்றவர்களைப் போல் சம்பளத்தை உயர்த்தச் சொல்லாமல், சரக்கு நன்றாயிருக்க வேண்டுமென்று வற்புறுத்துவதாலும், அவன் பிரதேசத்தில் வியாபாரத்தை அதிகமாக்கினதாலும் கம்பெனி அவனுக்குக் கடமைப்பட்டிருக்கிறது" என்றாள். பிறகு கொஞ்ச நேரம் தமாஷாகப் பேசிவிட்டு விடை பெற்றுக் கொண்டு கணவன் அனுப்பின டாக்ஸியில் ஏறிச் சென்றுவிட்டாள்.

கிறிஸ்மஸ் வாழ்த்துடன் சம்பள உயர்வு சமாசாரமும் வந்தது. சம்பளம் நூறு ரூபாயிலிருந்து ஒரே அடியாய் இருநூறு ரூபாயாகி விட்டது. சாம்பசிவன் அது தன் மனைவியின் கைக்குட்டையால் ஏற்பட்டதென்று நினைத்தான். அனசூயா அது தன் கணவனின் திறமையால் ஏற்பட்டதென்று நினைத்தாள்.

ஐந்து வருஷங்கள் சென்றன. மானேஜர் சாம்பசிவனுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் "நாங்கள் இந்தியாவை விட்டுப் போகத் தீர்மானித்து விட்டோம். உங்கள் நாட்டில் சணலுக்கும் தேயிலைக்கும் பதிலாகக் கரும்பும் நெல்லும் பயிரிடப் போகிறீர்கள். நாங்கள் வேண்டாவிருந்தாளிகளாக இங்கே இருக்க விரும்பவில்லை; இந்தியாவைக் 'குவிட்' செய்யப் போகிறோம்" என்று எழுதியிருந்தார்.

சாம்பசிவன் அந்தக் கடிதத்தை மனைவிக்குக் காட்டி, "மானேஜர் சொல்வது உண்மைதான். இந்தியா உணவுப் பொருள்கள் இல்லாமல் திண்டாடுகிறது. ஜனத்தொகை அதிகமாய் விட்டது. எங்கே பார்த்தாலும் ஜனங்கள் பஞ்சத்தாலும், பிணியாலும், கஷ்டப்படுகிறார்கள்" என்றான்.

அனசூயா அதற்கு "ஆமாம்; இந்தியாவின் ஜனத்தொகை கூடிய சீக்கிரம் 400,000,001 ஆகிவிடும் என்று புன் சிரிப்புடன் மறை பொருளாகக் கூறினாள்.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

147. அதோ காலைக் கதிரோன்!

கரன் செய்த போர் கடும் போராக இருந்தது. அம்பறாத் தூணியிலிருந்து அம்புகளை எடுத்தெடுத்துப் பிரயோகித்துக் கொண்டிருந்தான். "இனிமேல் இவனுக்குச் செல்வம் கொடுக்கக்கூடாது" என்று எண்ணிய ராமன் ஒரு சரியான அம்பை எடுத்து எய்து, கரனது வலக் கையை அறுத்து வீழ்த்தி விட்டான்.

வலக்கை விழுந்து விட்டது; இனி என்ன செய்யப் போகிறான்; பார்க்கலாம்.

வலக்கை வீழ்தலும்
மற்றைக்கை யால்வெற்றி
உலக்கை, வானத்(து)
உருமென ஓச்சினான்;
இலக்கு வந்துறு
முன் அதை, எந்தலும்
விலக்கி னான்ஒரு
வெங்கதிர் வாளியால்.

[வெற்றி உலக்கை: இதுகாறும் போரில் வெற்றியையே கொடுத்து வந்த கதாயுதத்தை; வானத்து உரும் என ஓச்சினான்: வானத்திலிருந்து பாயும் இடிதானோ என்று சொல்லும்படி அதிவேகமாக வீசினான்; இலக்கு வந்து உறும் முன்: லக்ஷியமான ராமனை வந்து அடைந்து தாக்கும் முன்; அதை: அந்தக் கதாயுதத்தை; ஏந்தலும் விலக்கினான் வெங்கதிர் வாளியால்: ராமனும் விலக்கினான் கொடிய ஒளி வீசும்படியான அம்பு ஒன்றினால்.]

கரன் முக்கியமாகக் கையாளும் ஆயுதம், கதாயுதம். அது சதா அவன் கையிலேயே இருக்கும். அவனது வெற்றி எல்லாம் கதாயுதத்தை வைத்துத்தான். அந்தக் கதாயுதம் ராமனது அம்பால் தொலைந்து போய் விட்டது.

கரனுக்கு ஒரே ஆங்காரம் வந்து விட்டது. சர்ப்பத்தைப்போல் சீறுகிறான்.

விராவ ருங்கடு
வெங்கதை இற்றபின்,
அராஅ முன்ற(து)
அனையவன், ஆற்றலால்
மராம ரங்கையில்
வாங்கிவந்(து) எய்தினான்:
இராமன் அங்கொர்த —
னிக்கணை ஏவினான்.

[விராவரும் கடு வெங்கதை இற்றபின்: எப்பொழுதுமே கையிலுள்ள அந்தக் கொடிய உலக்கை (கதை) அற்றுப் போகவும்; அராஅ முன்றது அனையவன்: பாம்பு கோபங் கொண்டதை ஒத்தவனை அவன்; ஆற்றலால்: மிக்க பலத்தால்; மராமரம் கையில் வாங்கி வந்து எய்தினான்: மராமரம் ஒன்றைக் கையில் ஏந்திக் கொண்டு எதிரே வந்தான்.]

ராவணனுடைய அரக்கன் ஏதோ வரம் பெற்றிருந்தான். மாயை வல்லவனாய் இருந்தான்; மற்றும் சக்திகளும் இருந்தன அவனுக்கு. இவ்வளவையும் கொண்டு



வீடுதேடிவந்தவர்:— ஸார், இந்த வீடு எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. நாளைக்கே நான் குடி வந்து விடுகிறேன். வேறு யாருக்கும் கொடுத்துவிட வேண்டாம்.

உலகத்தையெல்லாம் துன்புறுத்தி வந்தான். அப்படித் துன்புறுத்தி வந்த பாவமே வந்து கரனது கழுத்தை அறுத்துத் தள்ளியது என்று சொல்லும் படியாய் இருந்தது.

வரம்அ ரக்கன்
  படைத்தனின், மாயையின்,
உரம்உ டைத்தன்மை
  யால்,உல(கு) ஏழையும்
பரம்மு ருக்கிய
  பாவத்தி னால்,வலக்
கரம்எ னக்,கரன்
  கண்டமுற் றான்அரோ.

[உரம் உடைத் தன்மையால்: சகலவித சக்தியும் தன்னிடம் இருந்ததால்; பரம் முருக்கிய பாவத்தினால்: மிகுதியாகத் துன்புறுத்திய பாவத்தினால்; வலக்கரம் என: அந்த க்ஷணத்திலேயே ராமபாணத்தால் துண்டுபட்ட வலக்கையைப் போலவே; கரன் கண்டம் உற்றான்: கரன் கழுத்தும் துண்டு பட்டு விழுந்து விட்டது.]

கரன் துண்டு பட்டு விழுந்ததை வானவர் (முனிவர்கள்), பார்த்தார்கள். ஒரு ஆவேசம் உண்டாய் விட்டது. எக்களிப்போடு ஹா! ஹா!! என்று ஆரவாரம் செய்தார்கள். புஷ்பங்களை எல்லாம் அப்படியும் இப்படியுமாகத் தூவி ராமன் இருக்கிற இடம் தெரியாமல் நிறைத்து விட்டார்கள்.

ஆர்த்தெ ழுந்தனர்
  ஆடினர் பாடினர்
தூர்த்(து)அ மைந்தனர்
  வானவர் தூய்மலர்;—
நிர்த்த னும்பொலிந்
  தான்,கதி ரோன்நிசை
போர்த்த மென்பனி
  போக்கிய(து) என்னவே.

[தூர்த்து அமைந்தனர் வானவர் தூய் மலர்: மலர்களைக் கண்ட மட்டும் தூவி இடந் தெரியாமல் ஆக்கி விட்டு மிக்க எக்களிப் போடு ஆசனமிட்டு அமர்ந்தார்கள் முனிவர்கள்; நிர்த்தனும் பொலிந்தான்: புனித மூர்த்தியான ராமனும் முகத்தில் வெற்றிக்களை பிரகாசிக்க விளங்கினான்; எப்படி.— கதிரோன் நிசை போர்த்த மென்பனி போக்கிய தென்னவே: நாலா திசையும் போர்த்த மூடு பனியைச் சூரியன் போக்கியது போலவே.— நிர்த்தனும் பொலிந்தான்.]

உயர்ந்த பண்பாட்டுக்கும் ஞானத்துக்கும் எதிர்ப்பாய் இருந்துவந்த அரக்க தத்துவம் ஏதோ கரனோடு தொலைந்து போய் விட்டதாக எண்ணிச் சந்தோஷப் பட்டார்களாம் அறிஞர்கள். ஆனால் அப்படி எளிதில் தொலைகிற காரியமா அரக்க தத்துவம்?

★ ★ ★ ★ ★ ★ எப்படிப் பாடினரோ? ★ ★ ★ ★ ★ ★

என், நன்றாகத்தான் பாடினார்! இதற்கு முன்னாலும் இசைத் தட்டுகளில் ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் எவ்வளவோ நன்றாகத்தான் பாடினார்! ஆனாலும் இந்த ஜி. இ. 6297 இசைத்தட்டில் "எப்படிப் பாடினரோ?" என்ற பாட்டைப் பாடி யிருப்பதுபோல் இவ்வளவு கச்சிதமாகவும் அழகாகவும் மதுரமாகவும் இதற்கு முன்னால் எப்பொழுதும் பாடியதில்லை யென்று சொல்லலாம்.

முதன் முதலில் இந்த "எப்படிப் பாடினரோ?" பாட்டை ஸ்ரீமதி பட்டம்மாள் ரேடியோவில் பாடியபோது சிலர் அதன் ராகம் 'ஆபேரி' என்றார்கள். வேறு சிலர் 'பீம்ப்ளாஸ்' என்று சொல்லி நம்மைப் பயமுறுத்தினார்கள்! கடைசியில், பழைய 'கர்நாடக தேவகாந்தாரி' ராகந்தான் என்று ஏற்பட்டது.

அபூர்வராகங்களிலே சேர்ந்ததுதான்; ஆனால் அபூர்வ வக்கிரமாக மட்டுமில்லாமல் அபூர்வ இனிமை பொருந்தியிருக்கிறது. கேட்ட காதிலேயிருந்து விலகாமல் சுழன்று வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது.

சுவாமி சுத்தானந்த பாரதியாரின் சிறந்த சாஹித்யங்களுக்குள்ளே இந்தக் கீர்த்தனமும் ஒன்று என்பதில் ஐயமில்லை. சுவாமியார் இதை "எப்படிப் பாடினரோ?" என்று ஆச்சரியப்படும்படி அமைத்திருக்கிறார்.

"கருணைக் கடல் பெருகி காதலினால் உருகி" என்ற இடம் மிக அழகியது. இதன் அழகை நன்கு அநுபவிக்குமாறு ஸ்ரீமதி பட்டம்மாள் அங்கே நிறை நிரவல் செய்து ஸ்வரமும் பாடியிருக்கிறார்.

மொத்தத்தில், இசைத் தட்டு உலகத்தில், இது ஓர் அபூர்வ வெளியீடு.

புகைந்து போச்சு!

[நாரதர் அடாமிக் நிருபர் பிகினித் தீவுக்கு விமான மில்லா ஆளாகப் பறந்து சென்று ஆளில்லா விமானத்துடன் அறிந்து வந்திருக்கும் அதிசய விசேஷங்கள்.]

"பரீட்சைக்குப் போய் வரட்டுமா?" என்று ஆசிரியரைப் பார்த்துக் கேட்டேன்.

"பரீட்சையா? உனக்கென்ன பரீட்சை? நீ எதற்குப் போகிறாய்?" என்று கேட்டார் ஆசிரியர்.

"பஸிபிக் மகா சமுத்திரத்திலுள்ள 'பிகினி'த் தீவில் நடக்கும் அணுகுண்டுப் பரீட்சையைத்தான் சொல்கிறேன். அவசியம் வரவேண்டும் என்று ட்ரூமனும் அணுகுண்டுப் பரீட்சை அதிகாரி அட்மிரல் பிளாண்டியும் அழைப்பு அனுப்பி யிருக்கிறார்கள்."

"சரி; போய் விட்டு வா. ஆனால் காது ஜாக்கிரதை" என்று எச்சரித்து விடை கொடுத்து அனுப்பினார் ஆசிரியர்.

அவ்வளவுதான்; இரண்டு காதிலும் இரண்டு தோலாப் பஞ்சை எடுத்து அடைத்துக் கொண்டு 'பிகினி'த் தீவை நோக்கிப் பஞ்சாய்ப் பறந்தேன்.

* * *

அணுகுண்டு பரீட்சையைப் பற்றிச் சில நாளாக என்னவெல்லாமோ பயங்கர ஜோஸியங்கள் வெளியாகி வந்தன.

"சமுத்திரத்தில் அணுகுண்டைப் போட்டால் சமுத்திரம் பொங்கி பூமி நாசமாகி விடும்" என்றார் ஒருவர்.

"பூமிக் கடியிலே பெரிய பிலத்துவாரம் ஏற்பட்டுக் கடல் நீரெல்லாம் அதற்குள்ளே போய்விடும்" என்றார் இன்னொருவர்.



"உலகத்திலே காற்றே இல்லாமல் போய் விடும். மனிதர்கள் மூச்சுவிட முடியாது!" என்று மற்றொருவர் ஒரே போடாய்ப் போட்டார்.

அப்பேர்ப்பட்ட அதிசயங்கள் எல்லாம் நடக்கும் இடத்தில் நானும் கட்டாயம் இருக்கவேண்டும் என்றுதான் பிகினித் தீவுக்கு நான் விரைந்து சென்றேன். போன சமயம் பிகினித் தீவில் காலநிலை சரியாகவே இருந்தது. அதன் காலபலம்தான் சரியா யில்லை!

பரீட்சைக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் அங்கே வெகு ஜரூராகவே நடந்து கொண்டிருந்தன. பலிக் கப்பல்கள், பலி ஆடுகள் எல்லாம் தயாராய் நிறுத்தப் பட்டிருந்தன.

'நிவாடா' என்ற பிரம்மாண்ட யுத்தக் கப்பலுக்கு அழகாக ஆரஞ்சு வர்ணம் பூசி எல்லாக் கப்பல்களுக்குமிடையே நடுநாயகமாய் நிறுத்தி வைத்திருந்தார்கள். மேற்படி கப்பலைத்தான் அணுகுண்டுப் பரீட்சைக்குப் பலியாக நியமித்திருந்தார்கள்.

"ஆகா, இந்தக் கப்பலும் நீயும் நாளை இத்தனை நேரத்துக்கு யமலோகம் பட்ட பாடா யிருக்கும்" என்று எண்ணிக் கொண்டே அங்கிருந்து நேராக 140 மைல் தூரத்திலுள்ள 'குவாஜலீன்' என்னுமிடத்துக்குப் பாய்ந்தேன். அந்த இடத்தில் தான் அணுகுண்டு புறப்பாட்டுக்கு வேண்டிய ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. தூரத்தில் 'டேவ்ஸ்ட்ரீம்' என்னும் ராட்சஸ விமானமும் அண்ட பகிரண்டங்களையும் கிடுகிடுக்கச் செய்யும் அடாமிக் குண்டும் புறப்படுவதற்குத் தயாராய்க் காத்துக் கொண்டிருந்தன. அணு சக்திப் பரீட்சை அதிகாரி வைஸ் அட்மிரல் பிளாண்டியும், நூற்றுக்கணக்கான விஞ்ஞானிகளும், ஆயிரக் கணக்கான விவிடர்களும் 'குவாஜலீன்' தீவில் குழுமிக் கூட்டம் கூட்டமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

குறிப்பிட்ட முகூர்த்தத்தில் 'டேவ்ஸ்ட்ரீம்' விமானமானது அணுகுண்டைத் தூக்கி



போட்டோ: நமது சொந்த அடாமிக் நிருபர்

கங்காரு மாதிரி அடி வயிற்றில் அடக்கம் செய்து கொண்டது.

'நாகாசாகி' தீவை நாசமாக்கிய அடாமிக் குண்டு 'பிகினி'த் தீவை ஒரு கை பார்க்க, டேவ்ஸ்ட்ரீம் விமானத்தின் மீது ஆரோகணித்து ஜம்மென்று புறப்பட்டது.

சரியாக கடிகாரத்தில் 3-30 அடித்தது தான் தாமதம். டேவ்ஸ்ட்ரீம் விமானம் பிகினித் தீவின் தலை மீது அணுகுண்டைக் கொண்டு போய்த் திடுதிப்பென்று போட்டது. அவ்வளவுதான்; அணுகுண்டின் வெடி அதிர்ச்சியானது அண்டகடாகமும் நடுங்க ஈரேழு லோகங்களிலும் சென்று எதிரொலி செய்தது. அதிலிருந்து கிளம்பிய புகையானது வான மண்டல மெங்கும் பரவி 50,000 அடி உயரத்துக்கு மேலே போய் ஆகாசமெங்கும் அடைத்துக் கொண்டது. அணுகுண்டு வீச்சால் ஏற்பட்ட அக்னி ஜ்வாலையானது நூறு கோடி சூரியப் பிரகாசத்துடன் ஜோதிமயமாக வானளாவ எழுந்து கண்ணைப் பறித்தது.

இத்தனை கோலாகலங்களுக் கிடையே சகல தேசத்து விஞ்ஞானிகளும் அணுகுண்டின் வேலைப்பாடுகளைப் பரீட்சை செய்யும் பொருட்டு ஆளுக்கொரு மூலையாய்க் கிளம்பினார்கள். அந்தப் புகைக் காட்டினிடையே அவர்கள் எங்கு போனார்கள், எப்படிப் போனார்கள் என்று யாருக்கும் விளங்கவில்லை.

சிலர் புகைப்படலத்துக்குள் என்ன நடக்கிறது என்பதைச் சோதிக்கும் பொருட்டு ஆளில்லா விமானங்களை அனுப்பினார்கள். சிலர் கடலுக்குள் பரீட்சை செய்ய டார்ப்பிடோக்களை அனுப்பினார்கள்.

நானும் சட்டென்று கிளம்பி பிகினித் தீவுக் கருகில் கடல் நீர் எப்படி இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக ஜலத்தில் கையை வைத்துப் பார்த்தேன். அப்பப்பா! அது என்ன கொதி கொதித்துக் கொண்டிருந்தது என்கிறீர்கள்? பிகினிக் கடல் ஒரே வெந்நீர்க் கடலா யிருந்தது.

சரி; இந்த ஜலப் பரீட்சை போதும் என்று நினைத்துப் புகை மண்டலத்துக்குள் புகுந்து சற்றுப் புகைப் பரீட்சை செய்ய விரும்பினேன். உடனே ஒரு ஆளில்லா விமானத்தில் ஏறிப் புகைக்குள் பிரவேசித்தேன். ஆகா! அது என்ன புகை! அது என்ன புகை! நம்ம ஊரில் உள்ள 'ரேஷன் ஷாப்' அவ்வளவிலுமுள்ள ஈர விறகுக் கட்டைகளையெல்லாம் ஒன்று சேர்த்துக் கொளுத்தினாலுங் கூட அத்தனை புகையைக் காண முடியாது. இருக்கிற புகை போதாதென்று அங்கே பறந்துகொண்டிருந்த விஞ்ஞானி ஒருவர் சுருட்டைப் பற்ற வைத்துப் புகைவிட்டுக் கொண்டிருந்தார்!

ஆளில்லா விமானத்தின் மூலம் மேலே மேலே போய்ச் சஞ்சாரம் செய்தேன். சட்டென்று விமானம் ஏதோ பாறையில் மோதுவதைப்போல் இருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் மழை பெய்ததைப் போல் சில்லென்று விமானத்துக்குள்ளெல்லாம் ஐஸ் கட்டிகள் வந்து விழுந்தன.

“புகைப் படலத்துக்குள் ஐஸ் கட்டிகள் எப்படி வந்தன?” என்று எனக்கு ஒரே ஆச்சரியமா யிருந்தது. பின்னால் கீழே இறங்கிப் போனதும் விஷயம் வெட்ட வெளிச்சமாயிற்று.

அணு சக்தியினால் கடல் நீர் ஆவியாக மாறிப் புகைப் படலத்துடன் கிளம்பி ஆகாயத்தில் சென்றிருக்கிறது. அங்கே குளிர் காற்றுப் பட்டவுடன் அத்தனை ஆவியும் பனிக்கட்டியாக உறைந்து போயிருக்கிறது. விஷயம் அவ்வளவுதான்.

கடைசியாக, அட்மிரல் பிளாண்டியிடம் சென்று 'பரீட்சை ரொம்ப வெற்றிகரமாக நடந்து விட்டது போலிருக்கிறதே!' என்றேன்.

அவர் முகத்தை ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டு “என்ன வெற்றி? எல்லாம் ஒரேயடியாய்ப் புகைந்து விட்டதே! இது ஏமாற்றமல்லவா? எதிர் பார்த்த பலன் கிட்டவில்லையே?” என்றார்.

நான், "அதனாலென்ன? ரொம்ப நல்லதாய்ப் போய் விட்டது. அணு குண்டினால் எதிர்பார்த்த பலனை விளைவிக்க முடியவில்லையென்றால் அதனால் உலகத்துக்கு க்ஷேமமல்லவா? இதற்காக நீங்கள் வருத்தப்படுவானேன்?" என்றேன்.

"அது சரி; இதோ நீ ஏறிக் கொண்டு வந்திருக்கிறாயே, இந்த விமானம் உனக்கு ஏது?" என்று கேட்டார். அவ்வளவுதான்; அவர் அதை என்னிடமிருந்து அபகரிப்பதற்குள்ளாகச் சட்டென்று அந்த ஆளில்லா விமானத்தில் ஏறி வி. 2. வேகத்தில் ஊரை நோக்கிப் பறந்தேன்.

ஊருக்கு வந்து பத்திரிகையைப் புரட்டிப் பார்த்தேன். அணுகுண்டுப் பரீட்சையினால் அதிகச் சேதம் ஏற்படவில்லை என்றும், நாலு யுத்தக் கப்பல்கள் நாசமாகி விட்டன என்றும், "ஒரு ஆளில்லா விமானத்தைக் காணவில்லை" என்றும் போட்டிருந்தது.

யுத்தக் கப்பல்களின் விஷயம் என்னவானாலும், ஆளில்லா விமானம் காணாமற் போனதற்குக் காரணம் அணுகுண்டு அல்ல என்பது நிச்சயம்!

• • •

ஊருக்கு வந்ததும், "அணுகுண்டுப் பரீட்சை எப்படி?" என்று ஆசிரியர் வினவினார்.

"பிரமாதம் ஒன்றுமில்லை; அவர்களுக்கு ஒரு அணு குண்டும் இரண்டு மூன்று ஓட்டை உடைசல் கப்பல்களும் நஷ்டம்; எனக்கு ஒரு ஆளில்லா விமானம் லாபம்" என்றேன்.

"அட்மிரல் பிளான்டி என்ன சொன்னார்?" என்றார் ஆசிரியர்.

"பலன் ஒன்றும் பிரமாதமாயில்லை; கப்பல்களிலிருந்த ஆடுகள் எல்லாம் ஒரு சேதமுமின்றி அப்படி அப்படியே சந்தோஷமாக இருக்கின்றன என்று சொன்னார்."

"அப்படியா? நீ என்ன பதில் சொன்னாய்?"

"ஆடுகள் அஹிம்சையின் சின்னம்; காந்தி மகானின் உற்ற துணை; எனவே அஹிம்சைச் சின்னங்களாய் விளங்கும் அந்த அஜங்களை அணுகுண்டுகள் அணுகாது என்று பதில் கூறினேன்."

"ரொம்ப சரி! 'பிகினி'த் தீவு சம்பவங்களைப் போட்டோ எடுத்துக் கொண்டு வந்திருக்கிறாயா?"

"இதோ!" என்று சொல்லி ஒரு போட்டோவைக் கொடுத்தேன்.

ஆசிரியர் அதை உற்றுப் பார்த்து விட்டு ஒன்றும் புரியாமல், "இது என்ன ஒரே புகை மயமாயிருக்கிறதே? வேறு ஒன்றையும் காணோமே?" என்று கேட்டார்.

"அங்கே தெரிந்ததெல்லாம் புகைதான்! அத்துடன் நான் எடுத்துக் கொண்டு வந்ததும் புகைப்படம்தானே?" என்றேன்.

○ ○ ○ ○ ○ கம்பன் விழா ○ ○ ○ ○ ○

மகாகவி கம்பரைக் கொண்டாடுவதற்கு நாள் என்ன, நட்சத்திரந்தான் என்ன? வருஷம் முந்நூற்றறுபத்தைந்து நாளும் கொண்டாடலாம். சென்னைக் கம்பர் கழகத்தார் சென்ற இரண்டு வருஷமும் கம்பன் திருநாளைப் பங்குனி உத்திரத்தை யொட்டிப் பிரபலமாகக் கொண்டாடினார்கள். இந்த வருஷத்தில் மேற்படி பங்குனி உத்திரத்தின்போது சில அசௌகரியங்கள் நேர்ந்தபடியால் ஜூலை மீ 27, 28உ களில் சிறப்பாகக் கொண்டாடுவதென்று நிர்மாணித்திருக்கிறார்கள். கம்பர் திரு உருவப்பட ஊர்வலம் நடத்தவும், ஊர்வலத்தின்போது வீதி முனைகளெல்லாம் கம்பர் கவியமுத விநியோகம் செய்யவும் ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. கம்பர் கழகத்தைத் தமிழகம் முழுவதற்கும் பொதுவான பெரிய ஸ்தாபனமாகச் செய்யவும் முனைந்திருக்கிறார்கள். தமிழன்பர்களும் ரஸிகர்களும் மேற்படி தேதிகளை நினைவில் வைத்துக் கொண்டு திரளாக விஜயம் செய்து விழாவைச் சிறப்பிப்பதுடனே பொருளுதவி, பேனா உதவி, வாக்கு சகாயம் ஆகியவையும் செய்யும்படி கோருகிறோம். மற்ற விவரங்கள் பின் வரும் விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்:— ஸ்ரீ க. சோமசுந்தரம், பொதுச் செயலாளர், சென்னைக் கம்பர் கழகம், 8, சின்ன ரெட்டி தெரு, எழும்பூர், சென்னை.

கிரகலக்ஷ்மி ☆

விந்தன்

எங்கள் கடை வாயிலில் தினசரி 'மல்'லுக்காக வந்து மல்லுக்கு நிற்பவர்களில் அந்த ஏழைச் சிறுமியும் ஒருத்தி. வயது ஏழெட்டுதான் இருக்கும். பெயர் என்னமோ தெரியவில்லை. நானும் அவளை நாலைந்து நாளாகப் பார்த்துக் கொண்டு வருகிறேன்; ஒரு நாளாவது அவளால் எங்கள் கடையிலிருந்து மல் வாங்கிக் கொண்டு செல்லமுடியவில்லை. காரணம், 'க்யூ' வரிசையில் அவள் கடைசியில் நிற்க நேர்ந்து விடுவதுதான்.

அவள் என்னமோ ஒவ்வொரு நாளும் முன்னால் நிற்கப் பிரயத்தனம் செய்வாள்; முடிந்தால்தானே? ஆடை அலங்காரங்களில் பார்ப்பதற்கு ஒரு மாதிரியாயிருக்கும் அச்சிறுமியை மற்றவர்கள் ஒதுக்கித் தள்ளி விடுவது வழக்கம்; அவளும் அவர்களுடைய ஏச்சுப் பேச்சுக்களுக்குப் பயந்து ஒதுங்கி விடுவது வழக்கம்.

ஒரு கெஜம் மல்லின் விலை 0—9—4. தினசரி இத்தனை 'பீஸ்'கள்தான் விற்கலாம், ஆள் ஒன்றுக்கு இத்தனை கெஜம் தான் கொடுக்கலாம் என்று சர்க்கார் திட்டம் செய்திருந்தார்கள்.

ஆகவே, எங்கள் கடைக்கு வந்து தினசரி மல் வாங்கும் ஒவ்வொருவரின் விலாசத்தையும் நாங்கள் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்; பரிசோதனை அதிகாரிகள் வந்து பார்வையிடும்போது அவர்களுக்குக் காட்ட வேண்டும்: இதனால், என் அப்பாவின் உத்தரவுப்படி நான் எத்தனையோ பொய் விலாசங்களைச் சிருஷ்டி செய்ய வேண்டியிருந்தது. ஏன் தெரியுமா? அந்தப் பொய் விலாசதாரர்களுக்கெல்லாம் மல் விற்ற மாதிரி நாங்கள் அதிகாரிகளிடம் காட்டிக் கொள்வோம். அப்படிப் பொய்க் கணக்கு எழுதிய மல்லையெல்லாம் அதிக லாபத்துக்கு விற்போம். எப்படியாவது மல் கிடைத்தால் சரி என்று நினைக்கும் சில பணக்காரர்கள், கெஜம் ஒரு ரூபாய் என்றாலும் வாங்கிக் கொள்வார்கள்.

ஆனால், எல்லாவற்றையுமே கறுப்பு மார்க்கெட்டில் விற்று, சர்க்கார் அதிகாரிகளின் கண்ணில் ஒரேயடியாய் மண்ணை வாரிப் போடுவதற்கு எங்களுக்குக் கொஞ்சம் பயம். அதனால், தினசரி கட்டுப்பாட்டின்படி சிலருக்கு மட்டும் கொடுத்து விட்டு, மற்றவர்களுக்கு 'இல்லை' என்று சொல்லி விடுவோம்.

அப்படி 'இல்லை' என்ற பதிலைக் கேட்டு, தினசரி சோர்ந்து சென்றவர்களில் அந்த ஏழைச் சிறுமியும் ஒருத்தி.

★

ஒரு நாள் என்னையும் அறியாமல் அந்தச் சிறுமியிடம் எனக்கு அநுதாபம் உண்டாயிற்று. வழக்கம் போல் அன்றும் 'இல்லை' என்று சொல்லும் கட்டம் வந்தபோது, நான் அந்தச் சிறுமியை மட்டும் இருக்கும்படி சமிக்ஞை செய்தேன். குறிப்பறிந்து அவளும் என்னுடைய அழைப்பை எதிர் பார்த்து நின்றாள்.

மல் கிடைத்தவர்கள், கிடைக்காதவர்கள் எல்லோரும் கடையை விட்டுச் சென்ற பிறகு, நான் அந்தச் சிறுமியை அழைத்து, "உன் பெயர் என்ன, அம்மா?" என்று விசாரித்தேன்.

"நீலி!" என்றாள் அவள்.

"எடுத்ததற்கெல்லாம் அழுவாயோ?"

அவள் சிரித்துக் கொண்டே, "இல்லை; என் பெயர் நீலா. அம்மா 'நீலி!' என்றுதான் என்னைக் கூப்பிடுவாள்!" என்றாள்.

"எங்கே இருக்கிறாய்?"

"நடைத் தெரு, ஒன்பதாம் நம்பர் வீட்டில்!"

"உனக்கு எத்தனை கெஜம் மல் வேண்டும்?"

"ஆறு கெஜம்."

"ஐயோ! அத்தனை கெஜமா?"

"ஆமாம்; அக்காவுக்குப் புடவைக்காக!"

"ஏன், வேறு ஏதாவது புடவையாகவே வாங்கிக் கொள்ளக் கூடாதோ?"

"ஆறு கெஜம் மல்லுக்காக அக்கா மூன்றரை ரூபாய்தான் கொடுத்தனுப்பியிருக்கிறாள். அதுவும் இத்தனை நாளும் அவள் அப்பளம் பண்ணி விற்றுச் சொந்தமாகச் சேர்த்த ரூபாய்! வேறே புடவை வாங்குவதாயிருந்தால் இந்தக் காலத்தில் குறைந்தது பதினைந்து ரூபாயாவது வேண்டுமே?'

அதற்குப் பிறகு நான் அவனை ஒன்றும் கேட்கவில்லை. எங்கள் கடையில் வேலை பார்க்கும் ஒரு பையனைக் கூப்பிட்டு, ஆறு ஜெறும் மல்லிகை ஜிழித்து அவனிடம் கொடுக்கச் சொன்னேன். அதை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு அவன் போய் விட்டான்.

★

"வியாபாரத்தில் சபலச் சித்தம் கூடாது; திடச் சித்தம் வேண்டும்" என்பது என் அப்பாவின் சித்தாந்தம். இப்பொழுது அதை மீறியல்லவா நான் காரியம் செய்து விட்டேன்?

இப்படி எண்ணிய வண்ணம் உட்கார்ந்திருந்த நான், கடை வாயிலில் கார் வந்து நின்ற சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

ஐயோ! அப்பா வந்து விட்டாரா?

இல்லை; ராணிதான் காரிலிருந்து இறங்கி, ராஜுவ நடை போட்டுக் கொண்டு வந்தாள்.

அவள் என் அத்தையின் ஏகபுத்திரி; கலாசாலையில் படித்துக் கொண்டிருக்கிறாள். அவளுடைய அம்மாவுக்கு என் மீது என்ன கோபமோ தெரியவில்லை; நானது வரை ராணியை என் தலையில்தான் எப்படியாவது கட்டி வைக்க வேண்டுமென்று ஒரே பிடிவாதமாயிருந்து வருகிறாள்.

இதைப் பற்றி 'ஆண்களோடு பெண்களும் சர்வ சமானம்' என்ற கொள்கையுடைய ராணியின் அபிப்பிராயம் என்னவென்று இதுவரை எனக்குத் தெரியவில்லை.

இதற்கு மத்தியில், அவளுடைய அத்தையின் புதல்வன் ஒருவன், ராஜாமணி என்பவன், "கல்யாணம் செய்து கொண்டால் ராணியைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன்; இல்லை



யென்றால் கட்டாயம் செத்துப் போவேன்!" என்று சொல்லிக் கொண்டிருக்கிறான்.

இதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும்; இப்பொழுது ராணி வந்து விட்டாளே, என்ன செய்வது?

ராணியைப் பார்க்க நேரும்போதெல்லாம் நான் இப்படித்தான் தவியாய்த் தவிப்பேன். ஏன் தெரியுமா? அக்கம் பக்கத்தில் யார் இருந்தாலும் சரி, அவள் முதலில் என் கையைப் பிடித்துக் குலுக்கி விட்டுத்தான் ஏதாவது பேச ஆரம்பிப்பாள்.

இந்த நிலையில் அவள் இன்று என்னை நெருங்கியதும், நான் சுற்று முற்றும் பார்த்துத் திருடனைப்போல் விழித்தேன். ஆதிலும், மற்ற நேரங்களில் கடையின் குமாஸ்தாக்கள், பையன்கள் — இவர்களில் பாதிப் பேர் ஏதேதோ காரியமாக வெளியே சென்று விட்டிருப்பார்கள். கடையிலும் அவ்வளவு வியாபாரம் நடந்து கொண்டிருக்காது. இப்பொழுது என்னடா என்றால், அத்தனை பேரும் கடைக்குள் அடைந்து கிடந்தார்கள்; அவர்களெல்லாம் போதாதென்று கடையில் வியாபாரம் பிரமாதமாக நடந்து கொண்டிருந்தது!

என்ன செய்வேன்?—என் உடம்பு சில்லிட்டு விட்டது; உணர்ச்சி குன்றி விட்டது. வலுவில் புன்னகையை வரவழைத்துக் கொண்டேன்.

உணர்ச்சியற்ற என் கையைப் பிடித்து அவள் உணர்ச்சியுடன் கைகுலுக்கினாள்!

'அபாயம்' நீங்கியது.

அவள் எனக்கு எதிரேயிருந்த மேஜையின்மீது ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

கடைக்குள் அடைந்து கிடந்தவர்களெல்லாம் தங்கள் சொந்தக் காரியத்தைக் கவனிப்பதை விட்டு விட்டு, ஏதோ அதிசயப் பிராணியைப் பார்ப்பதுபோல் அவளைப் பார்க்காமல் பார்க்கத் தொடங்கினார்கள்! — அவளும் அவசியம் பார்க்க வேண்டியவளாய்த்தான் இருந்தாள்; பார்த்துச் சிரிக்க வேண்டியவளாய்த்தான் இருந்தாள்.

இதையெல்லாம் பார்த்து வெட்கப்பட வேண்டியவள் அவளாயிருக்க, என்னை ஏனோ அந்தப் பாழாய்ப்போன வெட்கம் பிடுங்கித் தின்றது.

இந்த நிலையிலிருந்த என்னை நோக்கி, "உடம்புக்கு என்ன?" என்று கேட்டாள் அவள்.

"ஒன்றுமில்லை!" என்றேன்.

"பின் ஏன் ஒருமாதிரியாயிருக்கிறீர்கள்?"

"என்ன மாதிரியாயிருக்கிறேன் ?"

"ஏதோ தலைவலி இலைவலியால் கஷ்டப் படுகிறவர்போலிருக்கிறீர்களே ?"

"ஆமாம்; கொஞ்ச நேரமாகத் தலையை வலிக்கத்தான் செய்கிறது !"

"அதாவது, நான் வந்ததிலிருந்து என்று சொல்லுங்களேன் !"

"சே, சே ! அதெல்லாம் ஒன்றுமில்லை... சரி, எங்கே இப்படி ...?"

"என்னை இங்கிருந்து சீக்கிரமாக வெளியேற்ற யோசனையோ ?"

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. வந்தவர்களை 'ஏன்' என்று விசாரிக்க வேண்டுமோ, இல்லையோ ?"

"ஆமாம், ஆமாம்; — அது கிடக்கட்டும்; எனக்குக் கொஞ்சம் மல் வேண்டியிருக்கிறது. நானும் 'க்யூ' வரிசையில்தான் நிற்க வேண்டுமோ ?"

"காலையில் வந்திருந்தால் அப்படி நின்றிருக்கலாம்; இப்பொழுதுதான் கடையில் கூட்டமில்லையே ! — சரி, எவ்வளவு மல் வேண்டும் ?"

"நாலு பீஸ் !"

"ஹா !"

"என்ன ! அவ்வளவு மல் கிடைக்காதோ ?"

"உனக்குக் கிடைக்காமலென்ன ? ஆனால் தற்சமயம் இங்கே அவ்வளவு மல் இல்லை; வேறு இடத்தில் இருக்கிறது. இரவு வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன்" என்றேன்.

அவள் போய் விட்டாள்; நானும் 'பிழைத்தேன் !' என்று பெருமூச்சு விட்டேன்.

★

அன்றிரவு.

என் அறையை நோக்கித் திடுதிடுவென்று நடந்து வந்தார் அப்பா.

நான் நடுங்கிவிட்டேன்.

"அடேய் ! அவ்வளவு தூரத்துக்கு வந்து விட்டாயா ?"

நான் எழுந்து நின்றேன்.

"உன்னை யாரடா நான் சொன்னதற்கு மேல் அதிகம் விற்கச் சொன்னார்கள் ?"

"........."

"இளம் பெண்ணைக் கண்டதும் இரக்கம் வந்து விட்டதோ ?"

"ஐயோ ! அவள் குழந்தை, அப்பா !"

"ஆமாம்; ஆமாம் ! அவள் குழந்தைதான் ! அவளுடைய அக்கா ?"

"இதென்ன பழி ? யாரோ விபரீதமாக அர்த்தம் பண்ணிக்கொண்டு சொன்னதைக் கேட்டு ......"

"சொன்னதைக் கேட்டு என்னடா ? இப்படி என் தலையை மொட்டையடிப்பதற்கு எத்தனை நாளாகக் காத்துக் கொண்டிருந்தாய் ?"

"அப்படி என்ன அப்பா பிரமாதமாக மொட்டையடித்துவிட்டேன் ? ஆறு கெஜம் மல்தானே ?"

"ஓஹோ ! எதிர்த்துப் பேசுவதற்குக் கூடத் தைரியம் வந்து விட்டதோ ? உம்... நட, வெளியே !" என்று இரைந்து கொண்டே கையை ஓங்கிக் கொண்டு ஆத்திரத்துடன் என்னை நெருக்கினார் அப்பா.

அடுத்த நிமிஷம் என் கன்னத்தில் 'பளீர்' என்று ஒரு அறை விழுந்தது.

அந்தச் சத்தத்தைக் கேட்டு அம்மா ஓடோடியும் வந்தாள்.

"நன்றாயிருக்கிறது ! ஏன் இப்படி அமர்க்களம் பண்ணுகிறீர்கள் ? நீங்கள் சொன்னதற்கு மேல் அவன் ஆறு கெஜம் மல்லை விற்று விட்டதால் உங்கள் குடியே மூழ்கிப் போய்விட்டதா ?"

"நீயும் அவனுடன் வெளியே போய்விடு ! இப்பொழுது 'பீஸ்' ஒன்றுக்கு இருபது ரூபாய் விலை பேசி, இன்றிரவு இருபது 'பீஸ்' கொடுப்பதாக ராம்ஜியிடமிருந்து பணம் வாங்கிக்கொண்டு வந்து விட்டேனே? அவன் இப்பொழுது வருவானே, ஆறு கெஜம் மல் குறைந்து விட்டதே, நான் அவனுக்கு என்ன பதில் சொல்வது ?"

"அதற்காகக் குழந்தையைப் போட்டு அடித்தால் வந்து விடுமா ?"

"நீயும் உன் குழந்தையும் நாசமாய்ப் போங்கள். என் சொற்படி நடக்காத பிள்ளை எனக்கு வேண்டாம் !"

மேலும் அறை விழுமோ, என்



னமோ என்று எனக்குப் பயமாயிருந்தது. எனவே, கன்னத்தைத் தடவிக் கொண்டே மெள்ள வீட்டை விட்டு வெளியேறினேன்.

★

சாலைகளில் நிகழும் சில சம்பவங்களை நம்மால் நம்ப முடிவதேயில்லை. ஆனால் அதேமாதிரி சம்பவங்கள் சில சமயம் நமது வாழ்க்கையில் நிகழும்போது, அவற்றை நம்மால் எப்படி நம்பாமலிருக்க முடியும்?

அன்று நல்ல வெண்ணிலவு. கலங்கிய மனத்துடன் என்னுடைய கால்கள் போன வழி நடந்து கொண்டிருந்தேன்.

அப்படியென்ன, நாம் செய்யத் தகாத காரியம் செய்து விட்டோம்? ஓர் ஏழைச் சிறுமியிடம் இரக்கம் காட்டியதா குற்றம்? அதுவும் காசை வாங்கிக் கொண்டுதானே இரக்கம் காட்டினோம்! இதற்கா இத்தனை அமர்க்களம்? — இந்தக் கோடை விடுமுறை என்று ஒன்று வந்து தொலைந்ததே? அது வந்திராவிட்டால் நாம் ஏன் அந்த நாசமாய்ப் போன கடையில் உட்கார்ந்திருக்கப் போகிறோம்? அந்தச் சிறுமியிடம்தான் ஏன் இரக்கம் காட்டியிருக்கப் போகிறோம்? அப்பா ஏன் இப்படிக் கோபித்துக் கொண்டிருக்கப் போகிறார்?......

இப்படியெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டே சென்ற என் கண்களுக்கு 'ஓடைத் தெரு' என்று பொறிக்கப்பட்டிருந்த தெருப் பலகை ஒன்று காட்சியளித்தது. பேதலித்திருந்த நான் ஒரு காரணமும் இல்லாமல் அந்தத் தெரு வழியே சென்றேன். மனச் சோர்வினால் அங்கே பூட்டிக் கிடந்த ஒரு வீட்டுத் திண்ணையை என் கால்கள் தஞ்சமடைந்தன. யோக்கியதாம்சத்தைக் கூடப் பொருட்படுத்தாமல் அந்தத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டேன். கதவில் எழுதப்பட்டிருந்த 9 என்கிற இலக்கம் என் கவனத்தைக் கவர்ந்தது. "இந்த வீட்டுச் சிறுமியால்தானே நமக்கு இந்தக் கஷ்டம்?" என்று எண்ணி என் மனம் இடித்தது.

திடீரென்று, "என்னடா, பூட்டை உடைப்பதற்கு யோசனையோ?" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

யாரோ ஒருவர் வந்து கொண்டிருந்தார். அவர் அந்த வீட்டில் குடியிருப்பவர் போலிருக்கிறது. தலைவிரி கோலமாயிருந்த என்னைத் திருடனென்று தீர்மானித்து விட்டார் போலும்!

அவருக்குப் பின்னால் ஒரு முதியவள், அவளுக்குப் பின்னால் ஒரு யுவதி, கடைசியில் அந்த நீலி!

அவள் என்னைப் பார்த்து விட்டாள்!

"அப்பா, அப்பா! அவர் இன்று என்னைத் தனியே அழைத்து அது கேளாமல் கொடுத்தனுப்பிய ஜவுளிக் கடைக்காரராச்சே, அவரைப் போய் 'பூட்டை உடைக்க யோசனையோ?' என்று கேட்கிறீரே?" என்று அங்கலாய்த்தாள் அந்தச் சிறுமி.

உடனே, "மன்னிக்கவேணும்; கோபித்துக் கொள்ளக் கூடாது!" என்று கெஞ்சும் பாவனையில் அருகே வந்தார் அவர்.

"அதற்கென்ன, இந்நேரத்தில் இப்படி வந்து உட்கார்ந்திருந்தால் எல்லோருக்கும் அப்படித்தான் தோன்றும்!" என்று நானும் அவருடைய மனச் சாந்திக்காகச் சொல்லி வைத்தேன்.

நீலியின் அக்கா என்னைக் கண்டதும் குனிந்த தலையை நிமிர்த்தவில்லை; ஆனால் என்னைப் பார்க்காமலிருக்கவும் இல்லை!

நானும் அவளைப் பார்க்காமல் பார்க்கத்தான் பார்த்தேன்.

பொன்னிறமான வதனம்; அந்த வதனத்திலே நடந்து வந்த வேகத்தாலோ என்னவோ, அங்கங்கே முத்து முத்தாக அரும்பிய வியர்வைத் துளிகள் — தங்க நகையில் வைரக் கற்களைப் பதித்து வைத்திருப்பதைப் போல! — அடாடா! வியர்வை நீரில் குங்குமத் திலகம் கலைந்திருந்ததுகூட அவளுடைய அழகை அதிகப்படுத்தியல்லவா காட்டுகிறது!

நித்த நித்தம் நிலைக்கண்ணாடியின் முன்னால் நீண்ட நேரம் நின்று, எத்தனை எத்தனையோ விதம் விதமான வர்ணப் பவுடரையெல்லாம் முகத்தில் பூசி, கூந்தலை என்னவெல்லாமோ செய்து சிங்காரித்துக் கொண்டு வரும் ராணியைப் பார்த்தால், கடைசியில் சிரிப்புத்தானே வருகிறது!

அத்தனை ஆடை அணிகளும் அலங்கார சிங்காரங்களும் இவளுக்கு இருந்தால்?

அவளுக்கேற்ற கணவன் இந்த உலகத்தில் ஏது? — நேரே இந்திர லோகத்துக்கே போய் ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை ஆகிய நால்வருடன் இவளும் ஐந்தாவதாகச் சேர்ந்து இந்திரனை மணந்து கொள்ள வேண்டியதுதான்! — அவளைக் கண்ட மாத்திரத்தில், இப்படியெல்லாம் எண்ணி என் மனம் இறும்பூது எய்தியது.

அப்பா கதவைத் திறந்து விட்டதும் அவன் உள்ளே போனான். "ரத்னா! விளக்கை ஏற்று!" என்று உத்தரவிட்ட வண்ணம் அவனுடைய அம்மா பின்னால் சென்றாள்.

அடுத்த நிமிஷம் அந்த இருளடைந்த வீட்டில் விளக்கேற்றி வைத்த அவள், என் இருள் சூழ்ந்த உள்ளத்திலும் விளக்கேற்றி வைத்தாள்!

★

இரவு மணி பத்துக்கு மேலாகி விட்டது. வீட்டை நோக்கித் திரும்பி வந்து கொண்டிருந்தேன். என் மனம் என்னிடத்தில் இல்லை; ரத்னாவைக் கண்ட பிறகு என்னுடன் வர அதற்கு இஷ்டமில்லை போலும்!

அன்பும் அடக்கமும் கொண்ட ரத்னா எங்கே, அகம்பாவமும் அலட்சியமும் கொண்ட ராணி எங்கே?

ஐயோ! நான் ஒரு ஏழையின் பிள்ளையாயிருந்திருக்கக் கூடாதா? அப்படியிருந்திருந்தால் நான் ரத்னாவைக் கல்யாணம் செய்து கொள்வதில் யாருக்கும் எவ்வித ஆட்சேபணையும் இருக்க முடியாதல்லவா?

இல்லை,—ரத்னாவுக்கு அத்தனை அழகைக் கொடுத்த ஆண்டவன், அவ்விதமே ஐசுவரியத்தையும் நிறையக் கொடுத்திருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்!


இப்படியெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டே வந்த நான், சிறிது நேரத்திற்கெல்லாம் வீட்டை அடைந்து விட்டேன். எனக்காகக் காத்துக் கொண்டிருந்த அம்மா, என்னைக் கண்டதும், "அப்பா! வந்து விட்டாயா? அந்த மட்டும் என் வயிற்றில் பாலை வார்த்தாயே!" என்று சொல்லி என்னை வரவேற்றாள்.

எடுத்ததற்கெல்லாம் நான் தற்கொலை செய்து கொண்டு விடுவேனோ என்று அவளுக்குப் பயம்; தாய்மை உள்ளத்தின் விசித்திரத்தைத்தான் என்னவென்று சொல்வது?

நான் சுற்று முற்றும் பார்த்தேன்;—அப்பா எங்கேயாவது கையை நீட்டிக் கொண்டு என் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாரோ என்றுதான்! அவருக்குப் பதில் அவருடைய சயன அறையிலிருந்து அவர் குறட்டை விடும் சத்தம் தான் பிரமாதமாக வந்து கொண்டிருந்தது. அலைமோதிக் கொண்டிருந்த என் மனதிலும் அமைதி நிலவியது.

அதற்குள் அம்மா எனக்குச் சாதம் பரிமாறி விட்டாள். சாப்பிட்டு விட்டுப் படுக்கப் போனேன். அதே சமயத்தில் யாரோ கதவைத் தட தடவென்று தட்டும் சத்தம் கேட்டது. விழுந்தடித்துக் கொண்டு ஓடினேன்.—என்ன பயங்கரமான சேதி!

[அடுத்த இதழில் முடியும்]



★ ★ ★

வரமாட்டார்!

"எங்கப்பா வீட்டிலே இல்லே; வாடா ராமு, விளையாடலாம், எங்கள் வீட்டில்!"

"உங்கப்பா எங்கேடா போயிருக்கிறார்? திடீரென்று வந்து விட்டால் என்ன செய்கிறது?"

"அதெல்லாம் வரமாட்டார்! எனக்கு எந்தப் பள்ளிக்கூடத்திலாவது இடம் இருக்கிறதா என்று பார்க்கப் போயிருக்கிறார். அதற்குள்ளே எங்கே திரும்பி வரப்போகிறார்!"

★ ★ ★

மகத்தான தவறு

ஆர்வி

ரங்கநாதன் வீட்டுக்குள் வந்து நுழைந்த போது மணி பன்னிரண்டு அடித்தது. வாய் பேசாமல் கதவைத் திறந்துவிட்டு ஓரமாய் ஒதுங்கி நின்றாள் ஸியாமளா. ரங்கநாதன் ஒன்றும் பேசாமல் தன் அறைக்குள் நுழைந்து கொண்டே விளக்கின் 'ஸ்விச்'சைப் போட்டான்.

"சாப்பிட வில்லையா?" என்று கேட்டாள் ஸியாமளா.

"உம்........." என்றான் ரங்கநாதன். அவன் ஆழ்ந்த யோசனையில் இருந்தான். அகாலத்தில் வீட்டுக்குத் திரும்பி வருவது மன்னிக்கக்கூடாத ஒரு குற்றம் என்பது அவன் அபிப்பிராயம்.

"சாப்பிட வில்லையா என்று கேட்கிறேனே, 'உம்' என்றால்...?"

இப்பொழுதும் அவள் கேள்வி ரங்கநாதன் காதில் ஒலிக்கவில்லை.

ஸியாமளாவுக்குப் படபடப்பு உண்டாயிற்று. வேகமாக வாசற் கதவைப் போய்ச் சாத்தித் தாளிட்டாள். விர்ரென்று உள்ளே போய்ப் பால் கூஜாவையும் தாம்பூலத் தட்டையும் எடுத்துக்கொண்டு மீண்டும் ரங்கநாதன் அறைக்குள் நுழைந்தாள்.

"என்ன அது?" என்றான் ரங்கநாதன் அவளைப் பார்த்து.

"ஒன்றுமில்லை; பால் கொண்டு வந்திருக்கிறேன்."

"நான் இன்னும் சாப்பிடவே இல்லையே? பாலைச் சாப்பிட்டால்போதும் என்று சொல்கிறாயா?" என்றான் ரங்கநாதன் அவளை நன்றாக எறிட்டுப் பார்த்துக்கொண்டே.

"முதலிலேயே சாப்பிடவில்லையா என்று கேட்டேனே?" என்றாள் ஸியாமளா அடக்கத்துடன்.

"சாப்பிடவில்லையா என்று நீ கேட்டது உண்மையாய் இருக்கலாம். ஆனால் சாப்பிட அழைத்ததாக எனக்கு ஞாபகமில்லையே?" என்றான் அவன்.

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி ஒன்றின் அஸிஸ்டெண்டு மானேஜர் அவன். எதிராளியை மடக்கிச் சாதுரியமாகப் பேசும் வன்மை அவனுக்குண்டு.

"சாப்பிடவில்லையா என்று வெறுமே குசலப்ரச்னம் செய்வதற்காகக் கேட்கவில்லையே!" என்றாள் ஸியாமளா.

ரங்கநாதன் முகம் சட்டெனக் கறுத்தது. எதிரி பேச்சில் தன்னை மிஞ்சுவது அவனுக்கு ரொம்ப அதிர்ச்சி உண்டாக்கும் விஷயம். அந்த எதிரி மனைவியாயிருந்தாலும் யாராயிருந்தாலும் ஒன்றுதான்.

"அப்புறம்...?" என்றான் பிறகு.

ஸியாமளா பேசாமல் தன் காரியத்தைக் கவனிக்க ஆரம்பித்தாள். ஸ்டூலில் பாலையும், தட்டையும் வைத்து விட்டுக் கீழே படிந்திருந்த தூசியைத் தட்டிவிட்டுத் தனியாக ஒரு ஜமக்காளத்தை எடுத்து அங்கே போட்டுக் கொண்டாள்.

• • •

எல்லாவற்றையும் செய்து முடித்து விட்டு மெதுவாக மேஜைப் பக்கம் வந்து, "இப்போது கூப்பிடுகிறேன், சாப்பிட வாருங்கள்!" என்றாள். கொஞ்சம் சிரிப்பது போல முகத்தையும் வைத்துக்கொண்டாள்.

ரங்கநாதன் கோபத்துடன் இருக்கும் போதுகூட அழகாக இருக்கவேண்டும் என்று நினைப்பவன்.

"ஏன், ஒரு ஜாமமோ இரண்டு ஜாமமோ தூங்கிவிட்டு வேணுமானால் வந்து சாப்பிடக் கூப்பிடேன்!" என்றான்.

அர்த்த ராத்திரியில் எந்தவிதமான விவாதமும் வைத்துக் கொள்ளச் ஸியாமளாவுக்குப் பிடிக்கவில்லை. எவ்வளவோ அவளிடம் அவனுக்கு வருத்தம் இருந்தது. ஆயினும் அவற்றை வெளிக்காட்ட அது ஏற்ற சமயமில்லை என்று நினைத்தாள். ஆகவே தன் கோபதாபத்தை ரொம்பவும் அடக்கிக் கொண்டு தாழ்ந்த குரலில் கொஞ்சம் கெஞ்சலாகக் கூட, "இதோ பாருங்கள்! என்னிடம் கோபித்துக்கொள்ள இதைவிட எவ்வளவோ நல்ல காரணங்கள் கிடைக்குமே! இப்படி நடு ராத்திரி வரையில் பசியோடு இருந்தால் கோபம்தான் வரும். எழுந்திருங்கள்!" என்று கேட்டுக் கொண்டாள்.

ரங்கநாதனுக்கு அவளிடம் பேசி ஜயித்து விட்டோம் என்பதற்கு இடமில்லாமல் போனது வருத்தமாய் இருந்தது. மேலும் அவனே தோற்றுப் போயிருந்தான் என்ற உணர்ச்சி அவனை விட்டு அகலவில்லை. இந்த எண்ணங்களால்தானோ என்னவோ நிர்மாணமாய்ச் சாப்பிட வர மறுத்துவிட்டான்.

எவ்வளவோ தடவை பலவிதங்களில் கேட்டுத் தளர்ந்துபோன சியாமளா, கடைசியாக ஒரு குண்டைத் தூக்கிப் போடுவதைப் போல, "பாவம் செய்தவர்கள்தான் பெண்களாகப் பிறக்கிறார்கள். கொஞ்சங்கூட அவர்களுக்கு மன்னிப்புக் கிடைப்பதில்லை. ஆனால் ஆண் பிள்ளைகள் தவறு செய்வதையும் செய்துவிட்டு அவர்களை லட்சியம்கூடச் செய்வதில்லை!" என்றாள்.

"என்ன சொல்கிறாய், நீ?"

"நீங்கள் ஏன் சாப்பிட வரமாட்டேன் என்கிறீர்கள்? அதைச் சொல்லுங்கள், முதலில்!"

"நீ ஏன் தனியாக உன் படுக்கையைக் கீழே போட்டுக் கொண்டாய்?"

சியாமளாவுக்கு அப்போது வந்த சிரிப்பை அடக்கிக் கொள்வது ரொம்பப் பிரயாசையாய் இருந்தது.

"அதுதானா உங்கள் கோபத்துக்குக் காரணம்?" என்றாள், பற்களை அழகாக மூடிக்கொண்டு.

ரங்கநாதனுக்கு உடனே பதில் சொல்வது லஜ்ஜையாய் இருந்தது. அவள் தனியாகப் படுக்கையைக் கீழே போட்டுக் கொள்வதை அவன் அடியோடு விரும்பவில்லை. ஆனால் அதைக் குறிப்பிட்டுக் கேட்டுத்தான் ஆகவேண்டியதாயிற்று. இதுவே அவனுக்குக் கொஞ்சம் அவமானமாய் இருந்தது. ஆனால் கௌரவத்தை விட்டுக் கொடுக்க முடிகிறதா? சுக துக்கம், மானம் அவமானம் எல்லாவற்றிலும் பாதிப் பங்குடைய அர்த்த பத்னியிடமும் அதை விட்டுக் கொடுக்க முடியவில்லை!



"என்னால் காரணம் எதையும் குறிப்பிட்டுச் சொல்ல இப்போது முடியாது. ஆனால் வரவர தீவிரமாய்ப் பேசும் குணம் உனக்கு அதிகமாய் வந்திருக்கிறது. நான் உனக்குத் தண்டனை கொடுக்கத் தயாராய் இல்லை. அந்தச் சாதத்தை இங்கேயே தட்டில் எடுத்துக் கொண்டு வந்துவிடு!" என்றான். குரல் தணிந்து விறைப்பும் தளர்ந்து விட்டது.

சியாமளா கொஞ்சம் உற்சாக மடைந்தாள். லேசாக அரும்பியிருந்த வேர்வையைத் துடைத்துக் கொண்டு அழகிய முகத்தில் புன்னகை தோன்ற, "முன்னமேயே சொல்லியிருந்தால் எவ்வளவு சந்தோஷமாய் இருந்திருக்கும்! நீங்கள் எப்போதுமே இப்படித்தான்......" என்று சொல்லிவிட்டு அவன் முகத்தைப் பாராமலேயே உள்ளே சென்றாள்.

* * *

நான்கு வருஷங்களுக்கு முன்புதான் அவனுக்கும் அவனுடைய மாமாவின் பெண் சியாமளாவுக்கும் கையைக் கோத்துக் கொண்டு வாழ்வுப் பாதையைக் கடக்கும் பிரயாணம் ஆரம்பமாயிற்று.

அவன் படித்து முடித்து விட்டுக் கிராமத்துக்குப் போயிருந்தான். பாட்டி உயிருடன் இருக்கும் வரை விடுமுறை நாட்களில் எல்லாப் பேரன் பேத்திமார்களும் கிராமத்துக்கு வந்துவிடவேண்டும் என்பது அவள் கட்டளையாயிருந்தது. பாட்டி ரொம்பப் பெரிய இடத்தில் பிறந்து, வளர்ந்து வாழ்க்கைப்பட்டவள். பெரும் போக்கான குணம், நடத்தை. வீட்டில் சதா கலகலவென நாலு பேர் இல்லாவிட்டால் அவளது தளர்ந்த உடல் இன்னும் சோர்ந்துவிடும்.

பெண் வரவர வயதடைந்து வருகிறாளே என்ற கவலையே மாமாவுக்கு எழவில்லை. இரண்டு சகோதரிகளுக்கும் வாட்ட சாட்டமாக இரண்டு பிள்ளைகள். இரண்டும் தகுந்த இடம். ஏதாவது ஒரு பையனுக்கு முடித்து விட்டால் போகிறது என்ற நிச்சிந்தை அவருக்கு.

சியாமளா எந்த வகையைச் சேர்ந்த பெண் என்பதை யாராலும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது.

"ஏண்டி, ரங்கனைக் கல்யாணம் செய்து கொள்ளப் போறயா, ராமுவையா?" என்று பாட்டி கேட்பாள்.

"நீதான் சொல்லேன், யாரைப் பண்ணிக் கொள்ள வேண்டுமென்று?" என்று நாசுக்காக ஓர் எதிர்க் கேள்வியைப் போடுவாள் சியாமளா.

பாட்டிக்கு இரண்டு பேரில் ஒருவனைத் தேர்ந்தெடுப்பது சிரமம் என்ற விஷயம் அவளுக்குத் தெரியாமல் இல்லை. இரண்டு பையன்களும் நல்ல அழகு. இரண்டு பேரும் பி. ஏ. படித்திருக்கிறார்கள். இரண்டு குடும்பமும் ஒன்றுக்கு ஒன்று சளைக்காத குடும்பம். ஒரே வயசு. பாட்டிக்கு இரண்டு பிள்ளைகளும் சமம்தான். பாட்டியின் இரத்தத்

தம் சங்கடத்தைச் சியாமளா வெகு நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு விடுவாள்.

"போடி போக்கிரி, உனக்கு யாரைப் பிடிக்கிறது? அதைச் சொல்லேண்டி!" என்பாள் அவள் மீண்டும்.

"நான் யாரைச் சொன்னாலும் மற்றவரைக் குறித்து உன் மனசு சங்கடப்படும். அதற்காக நான் இதைப் பற்றி யோசனை செய்வதே யில்லை!" என்று சொல்லி விடுவாள்.

உண்மையும் அப்படியேதா னிருக்கும் போலிருந்தது. ரங்கநாதனுடன் சேர்ந்து கொண்டு ராமுவை ஒருசமயம் பரிகசிப்பாள். அதையே முழுவதும் நம்பிவிட முடியாது. அடுத்த கணமே ராமுவின் கட்சியில் சேர்ந்து கொண்டு ரங்கநாதனை மடக்க ஆரம்பித்து விடுவாள்.

அந்த விடுமுறையிலும் நாட்கள் இப்படியே தான் பெரும்பாலும் கழிந்து கொண்டிருந்தன. பாட்டிக்குத் தள்ளாமை அதிகமாக ஆக வீட்டில் கல்யாணப் பேச்சு வலுத்துக் கொண்டிருந்தது.

சியாமளா வரவர ரங்கநாதனை ஏறெடுத்துப் பார்க்காமல் இருக்கத் தலைப்பட்டாள். ரேழி ஹாலில் அவன் உட்கார்ந்திருந்தால் ஜாடையாக வாசல் பக்கம் வேகமாக ஓடிப்போய் ராமுவிடம் பேச்சுக் கொடுப்பாள். ரங்கநாதன் வாசலுக்கு எழுந்து வந்தால் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டே ஓரமாய்ப் போய் நின்று கொள்வாள். ரங்கநாதனுக்கு இது மேலும் மனக் கஷ்டத்தை உண்டு பண்ணியது. "என்னை இவள் கல்யாணம் செய்து கொள்ளா விட்டால் போகிறது! வெறுப்பானேன்?" என்பது அவனுக்குப் புதிராகவே இருந்தது.

ரங்கநாதன் ஒரு தீர்மானத்துக்கு வந்தான். அதன்படி ஒரு சிறு கடிதம் எழுதி ஒருவருமில்லாத சமயம் பார்த்து அதைச் சியாமளாவிடம் கொடுத்தான்.

"என்னைக் கண்டு நீ ஓடி ஒளிந்து கொள்வதின் கருத்து எனக்குப் புரியவில்லை. என்றாலும் பாவம், உனக்குத் தான் எவ்வளவு கஷ்டம்! வாசலுக்கு வந்தால் உள்ளே ஓடிவிடுகிறாய்; உள்ளே வந்தால் வெளியே போகிறாய்! என்னிடம் பேசப் பிடிக்கவில்லையானால் நானே ஒதுங்கிக் கொண்டு விடுவேன். ராமுவாவது அந்தச் சௌபாக்கியத்தை அடையட்டும். உங்களுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது என்று கருதியே தான் நாளைக் காலை ஊருக்குக் கிளம்பத் தீர்மானித்து விட்டேன். சாத்தியமானால் இரவு வரை உன் பதிலுக்குக் காத்திருக்கிறேன்.

துர்ப்பாக்கியன் – ரங்கநாதன்."

சியாமளாவிடம் இதைக் கொடுத்து விட்டு அவன் ரேழி ஹாலை விட்டு அசையவில்லை. சிந்தனை அலைகள் சற்று வேகமாக அவன் மனத்தை வந்து தாக்கின. சியாமளா ராமுவிடம் பேசிக்கொண்டு, 'களுக்' என்று உள்ளே சிரித்துக் கொண்டிருந்ததைக் கேட்ட அவன் உள்ளம் காரணமற்ற துன்பத்தை அநுபவித்தது.

* * *

இரவு சாப்பாடாகி விட்டது. அப்பொழுதும் ரங்கநாதன் தன் பழைய இடத்திலேயே வந்து உட்கார்ந்தான்.

பின்னால் கைவளையல்களின் ஒலி போன்ற சலசலப்பு. ரங்கநாதன் மனம் திக் திக் கென்று அடித்துக் கொண்டது. பிரகாசமாய் எரியும் தீபத்தைக் கண் கொட்டாமல் பார்த்தான். திரும்பவே முடியவில்லை அவனால். சலசலப்பு வரவர அருகில் நெருங்கி வரும்போது அவன் மனமே வெடித்து விடும்போல் இருந்தது.

"ஏண்டா, ரங்கன்தானே! காலையிலே ஊருக்குக் கிளம்பப் போறயா, என்ன?" என்று கேட்டுக்கொண்டே அவன் பாட்டி தான் வந்து நின்றாள்.



திருடனின் சந்தேகம்



திருடன் :— நிஜமாகச் சொல்லுங்க: இத்தனை பணத்தையும் நீங்க 'பிளாக் மார்க்கெட்'டிலேதானே கொள்ளையடிச்சீங்க?

ரங்கநாதனுக்குக் காதே குப்பென அடைபட்டுப் போனதுபோலத் தூக்கி வாரிப் போட்டது. அவனிடம் இருந்த சாவிக் கொத்து கைவளையல் போன்ற ஒலிகாட்டி மிரட்டி விட்டதைத் தெரிந்து கொண்ட போது என்னவோபோலிருந்தது அவனுக்கு.

“ஆமாம், பாட்டி! இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் ஒரு வேலைக்குப் பிரயத்தனம் பண்ணியிருந்தேன். சீக்கிரமாய் வரச் சொல்லி மானேஜிங் டைரக்டர் சொன்னாராம். அப்பா எழுதியிருக்கார். அதனாலேதான்!” என்றான் சமயோசிதமாய். ஆனால் அதில் உண்மையும் இல்லாமல் இல்லை.

பாட்டி, ரங்கநாதன் காதோடு காதாய்க் குனிந்து கொண்டு, “ஏண்டா, அந்தப் பெண் உன்னைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு பிடிவாதமாய்ச் சொல்லிக் கொண்டிருக்காள்... ஒரு வழியாய்க் கல்யாணத்தையும் முடிச்சண்டு போகாமே ...... எனக்கும் இப்பவோ அப்பவோன்னு உடம்பு ஆயிடுத்து......” என்றாள்.

ரங்கநாதனால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

“என்னையா? அவள் அப்படிச் சொல்லியிருக்க மாட்டாளே, பாட்டி!”

“போடா, அசடு! நிஷ்டூரமாய் இப்படிப் பேசாதே. அவள்தான் சிறிசு; வெட்கப்பட்டுண்டு ஒதுங்கிப் போனால் நீ ஒரேயடியாய் மாய்ஞ்சு போறயே! எங்கே ஓடிப் போயிடறா...?” என்று சொல்லிவிட்டுப் பாட்டி உள்ளே போகலானாள்.

ரங்கநாதன் 'ஏன் இப்படிக் குறைபட்டுக் கொண்டு கடிதம் எழுதினோம்' என்று அங்கலாய்த்துக் கொண்டான்.

மீண்டும் முன்போன்ற சல சலப்பு. ஆனால் இப்போது அவன் சற்றும் தயங்காமல் திரும்பிப் பார்த்தான். நீண்ட கரு விழிகளையுடைய கண்கள் கவிந்து நாணத்துடன் தலை குனிந்து நின்ற சியாமளா தான் அங்கே நின்று கொண்டிருந்தாள்.

அவள் மெல்லிய குரலில், “நான் உங்கள் கடிதத்தைப் படிக்கவே இல்லை. அப்படியே கிழித்துப் போட்டு விட்டேன். எதாவது நிஷ்டூரப் பட்டுக்கொண்டு எழுதியிருப்பீர்கள்; வேறென்ன?” என்றாள்.

“தெரியும்; நீ படித்ததும் படிக்காததும்!”

“எப்படித் தெரியுமாம்?”

“பின் ஏன் நீ இங்கே வருகிறாய்? அத்துடன் நான் ஊருக்குப் போகிறேன் என்பது பாட்டிக்கு எப்படித் தெரியும்? நீ சொன்னால்தானே தெரிவதற்கு?”

சியாமளாவின் முகம் குப்பெனச் சிவந்தது. அவள் மறு கணமே அவ்விடத்திலிருந்து மறைந்து போனாள். ஆனால் அவன் மனத்தை விட்டு ......?


* * *

ரங்கநாதன் கனவு உறக்கத்திலிருந்து கண்களை விழித்து, அப்போது துள்ளியோடிய சியாமளா இப்போது எப்படி இருக்கிறாள் என்று அவள் கீழே படுக்கையைத் தனியாக எடுத்துப் போட்டுக்கொண்ட இடத்தைப் பார்த்தான்.

அங்கே இடம் காலியாயிருந்தது. சியாமளாவின் படுக்கை, கட்டிலின்மேல் அவன் படுக்கை யருகில் கிடந்தது. அதுமட்டும் தனியாகக் கிடக்கவில்லை; அதன்மேல் அவளும் படுத்திருந்தாள். நீண்ட கருங் கூந்தல் அவளுக்குப் பக்கத்தில் அழகுடன் வளைந்து நெளிந்து அவன் படுக்கும் இடத்தை அடைத்துக் கொண்டு கிடந்தது.

அந்தக் காட்சியை விடாது உற்று நோக்கினான் ரங்கநாதன். அவன் மனம், “தப்புத்தான்; உன்னைத் தனியே விட்டுவிட்டு இரவில் வீண் பொழுது கழித்து விட்டு வந்தது மகத்தான தவறுதான்” என்று ஆயிரம் தடவை சொல்லிக் கொண்டது.

கடைசியாக அவளுடைய பின்னலைக் கையில் எடுத்து, “சியாமளா!” என்று மெல்லிய தணிவான குரலில் அன்புடன் கூப்பிட்டான் ரங்கநாதன்.




கடினமான பாதையானாலும்...

டன்லப்

ஜயண்ட்ஸ்

★ சமாளித்துவிடும்



★ ஏனென்னில் ஒவ்வொரு டயரும் மிக உறுதியுள்ள

"டியூராகார்டை"

கொண்டு செய்யப்பட்டிருக்கிறது.

DK-201-TM

பரஸ்பர உதவி!

ஸோமாஸ்

நாகராஜன் சுகுணாவினிடம் வைத்திருந்த அன்புக்கு உதாரணம் சொல்ல வேண்டுமானால், சுகுணா நாகராஜனிடம் கொண்டிருந்த அன்பைத்தான் சொல்ல வேண்டும்.

நாகராஜன் சுகுணாவின்மேல் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, 'அவளுக்குத்தான் மாலையிடுவேன், இன்றேல் உயிரை விடுவேன்' என்று ஒற்றைக் காலில் நிற்கவில்லை. ஆனாலும் சுகுணாவைத் தான் மணக்க வேண்டும் என்னும் எண்ணம் மட்டும் அவன் இருதய அடிவாரத்தில் படிந்திருந்தது. தகப்பனாரிடத்தில் எடுத்துச் சொல்லத் தைரியம் இல்லை. ஆனால் எப்படியோ இந்தக் காதல் மணம் எதிர்பாராதவிதமாக நடந்து விட்டது.

காதல் தெய்விகம் என்று கூறுகிறார்களே அந்தமாதிரி இவர்கள் கொண்ட காதலும் தெய்விகக் காதல் என்பதில் ஐயமில்லை. ஏனென்றால் தெய்வச் செயலாக நடந்த காதல் மணந்தானே இது!

* * *

ஆபீஸிலிருந்து வரும்பொழுது நாகராஜன் பூக்கடை வழியாகத்தான் தினந்தோறும் வருவான். விதவிதமான வர்ண ஜாலங்களில் இன்ப உலகத்துக்கு இழுத்துச் செல்லும் இனிமையான வாசனை வீசும் கதம்பங்களைப் பார்க்கும்போது அவைகளை வாங்கவேண்டும் என்று நாகராஜன் துடிப்பான். ஆனால் கதம்பம் வாங்கிக்கொண்டு போனால் வீட்டில் என்ன நேரும் என்று அவனுக்குத் தெரியும். இதையொட்டி வீட்டில் ஒரு கதம்ப நிகழ்ச்சி தயாராகிவிடும்.

"என்டியம்மா சுகுணா, அவன் கதம்பம் வாங்கிக்கொண்டு வந்தானா? பூவோ, காயோ பெரியவர்கள் பாடு, நமக்கென்ன என்று இருந்தால் என்ன? இந்தக் கதம்பம் நான் வாங்கமாட்டேனா? இவன் வாங்கிப் பெண்டாட்டிக்குக் கொடுத்தால் தான் திருப்தியா? அப்படி வாங்கிக்கொண்டுதான் வந்தானே, அதை என்னிடம் கொடுத்து அவளுக்கு வைக்கச் சொன்னால் என்ன?" என்று நாகராஜனின் தாயார் ஒலிபரப்புவாள். அக்கம் பக்கத்து வீடுகளுக்கு இந்தச் செய்தியை 'அஞ்சல்' செய்வாள்.

இந்தக் கதம்ப நிகழ்ச்சி சுகுணாவின் கண்ணீரில் முடியும். அது நாகராஜனுக்கு ஆபத்தாய் முடியும் என்று சொல்ல வேண்டியதில்லை.

நாகராஜன் ரொம்ப புத்திசாலி. அந்த மாதிரி அசந்தர்ப்பமாக எதையும் செய்து விட மாட்டான். "மைத்துனன் பாலுவை வழியில் பார்த்தேன். அவன் கதம்பம் வாங்கிக் கொடுத்தான்!" என்று ஒரு பொய் புளுகிப் பூவைக் கொடுப்பான். தன் அருமைச் சுகுணாவின் ஆசையை எப்படியோ நிறைவேற்ற வேண்டியது! அவ்வளவுதானே!

* * *

அன்று ஆபீஸிலிருந்து வரும்பொழுது ஒரு நவநாகரிக மோஸ்தர் புடவை நாகராஜன் கண்களில் பட்டது. சுகுணாவுக்கு அது எவ்வளவு நன்றாயிருக்கும்! உடனே வாங்கிவிடலாம் என்று நினைத்தான். இருந்தாலும் சுகுணாவும் பார்த்து அங்கீகரித்து விட்டால் நல்லதல்லவா? அவளை எப்படிக் கடைக்கு அழைத்துச் செல்வது? அதுதான் ரொம்ப சிரமமான காரியம். சொந்த நிலத்தில் விளைந்த அரிசியானாலும் இந்த நாளில் எங்கேயாவது கொண்டு போவதாயிருந்தால் 'பர்மிட்' வாங்க வேண்டு மல்லவா? அதேமாதிரிதான் சுகுணாவை எங்கேயாவது அழைத்துப் போவதாயிருந்தால் தகப்பனாரிடமும் தாயாரிடமும் 'பர்மிட்' வாங்கியாக வேண்டும். நாகராஜன் அப்பாவிடம் போய்த் தயங்கித் தயங்கி நின்றான். பிறகு பவ்யமான குரலில் விஷயத்தை ஆரம்பித்தான்.

"அப்பா, பாலு இன்னைக்கு மாம்பலத்துக்கு வரச் சொன்னான். போகலாம் என்று..!" என்று பாதி வாக்கியத்தை முடிக்காமலேயே கொஞ்சம் நிறுத்தினான்.

"போய் விட்டு வாயேன்! இதற்கு என்னைக் கேட்பானேன்?" என்று அவன் தகப்பனார் சந்தோஷமாகக் கூறினார்.



"இல்லை......உம்......சுகுணாவையும் அழைத்து வரச் சொன்னான்!" என்று கூறி விட்டு நாகராஜன் அப்பாவின் முகத்தைப் பார்த்தான்.

"அம்மாவைக் கேட்டு அழைத்துக் கொண்டு போயேன்" என்று கூறி அவர்

மெதுவாகத் தட்டிக் கழித்து விட்டார்.

நாகராஜன் இந்த விஷயத்தை அம்மாவிடம் நாஸூக்காகச் சொன்னான்.

"நாகராஜா, அவளைத் தனியாக அழைத்துக் கொண்டு போகும் பெரியதனம் மட்டும் வேண்டாம். எனக்குக் கல்யாணம் ஆகி முப்பத்தைந்து வருஷம் ஆகிறது. இதுவரையில் ஒரு நாள்கூட நானும் அப்பாவும் தனியாக எங்கேயும் போனது கிடையாது. மாம்பலத்தில் பாலுவின் அகத்தில் என்ன விசேஷம்? உங்கள் இரண்டு பேரை மட்டும் கூப்பிட்டானுக்கும்!" என்றாள் நாகராஜனின் தாயார்.

"ஊரிலிருந்து அவளுக்கு ரொம்ப வேண்டியவர்கள் வந்திருக்கிறார்களாம். அவர்கள் சுகுணாவையும் என்னையும் பார்க்க வேண்டும் என்கிறார்களாம். நாளைக்கு அவர்கள் ஊருக்குப் போகிறபடியால் இங்கே வந்து போக அவகாசம் கிடையாதாம்!" என்று நாகராஜன் சங்கிலித் தொடர்போல் பொய் சொல்லிக் காரியத்தை ஒருவாறு சாதித்தான்.

இப்படியாக பாலுவின் பெயரை நாகராஜன் உபயோகப் படுத்தினதில் பாலுவுக்கு நல்ல பெயர் வருவதற்குப் பதிலாகக் கெட்ட பெயர்தான் வந்தது. பாலுவுக்கு விவாகம் வேறு ஆகிவிட்டது. நாகராஜனின் மாமா பெண்ணைத்தான் அவனுக்குக் கொடுத்திருந்தது. விவாகம் ஆன பிறகும் அவன் குடித்தனப் பொறுப்பில்லாமல் அதிகச் செலவாளியாயிருந்தது நாகராஜனின் பெற்றோர்களுக்குப் பிடிக்கவில்லை.

மேலும் சமீபத்தில் நடந்த சம்பவம் ஒன்று அவர்களது வெறுப்பை அதிகப்படுத்தியது. அந்தச் சம்பவம் நாகராஜனுக்கு ஒரு மாத 'போனஸ்' கிடைத்தது தான். 'போனஸ்' பணத்தைக் கண்ணை மூடிக்கொண்டு செலவழித்துச் சுகுணாவுக்கு வேண்டிய புடவை, நவநாகரிக வளை, முதலிய சாமான்களையெல்லாம் வாங்கி நிரப்பி விட்டான்



நாகராஜன். பாலு சாமான்களையெல்லாம் வாங்கித் தந்ததாக அப்பாவினிடமும் அம்மாவினிடமும் கூறினான்.

நாகராஜனின் தகப்பனார் பாலு இப்படி ஊதாரித்தனமாகப் பணத்தைச் செலவழிப்பதை அவனுடைய தகப்பனாரிடம் கூறி அவனைக் கண்டிக்கச் சொல்ல வேண்டும் என்று நினைத்தார். உடனே மாம்பலத்துக்குப் புறப்பட்டுப் போனார். பாலுவின் தகப்பனாருடன் பல பேச்சுக்கள் பேசிக் கொண்டிருந்துவிட்டு மெதுவாகத் தாம் வந்த காரியத்தைச் சொல்ல ஆரம்பித்தார்.

"ஒரு முக்கியமான விஷயமல்லவா பேச வந்தேன்! நம்ம பாலுவுக்கு ஒரு மாசம் 'போனஸ்' இப்போது வந்தாற்போலிருக்கிறதே! தங்கை சுகுணாவுக்கு என்னென்னவோ வாங்கித் தந்திருக்கிறான்!" என்று இழுத்தாற்போல் பேச்சை நிறுத்தினார்.

உடனே பாலுவின் தகப்பனார் ஆச்சரியத்துடன் "அப்படியா? பாலுவுக்கு 'போனஸ்' பணம் வந்த சமாசாரம் எனக்குத் தெரியாதே! நாகராஜனுக்குத்தான் 'போனஸ்' கிடைத்ததாகப் பாலு சொன்னான். நாகராஜன்கூடத் தன் மருமாளுக்குப் புடவையும் இன்னும் பல சாமான்களும் வாங்கித் தந்ததாகச் சொல்லி பாலு அவைகளையெல்லாம் காட்டினானே!" என்று திகைப்புடன் கூறினார்.

"யாருக்கு நிஜமாக 'போனஸ்' வந்தது என்று தெரியவில்லை. ஆனால் தவறு நம்முடையதுதான். இந்தக் காலத்துப் பையன்களுடைய மனோபாவம் தெரியாமல் நாம் நடந்து கொண்டுவிட்டோம். நீர் ஒரு சுத்தக் கர்நாடகம்; நானும் கர்நாடகம்!" என்றார் நாகராஜனின் தகப்பனார். பாலுவின் தகப்பனாரால் அதை மறுக்க முடியவில்லை.

இப்பொழுதெல்லாம் நாகராஜனும் பாலுவும் அவரவர்களுடைய மனைவிக்குச் சாமான் வாங்கித் தரும் விஷயத்தில் சுதந்திர புருஷர்களாகி விட்டார்கள்.

○ ○ ○ நாய்களின் ஆட்சேபனை! ○ ○ ○

தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களை அங்குள்ள வெள்ளையர்கள் படுத்தும் பாட்டைக் கண்டிக்கும் முறையில் கராச்சி ஓட்டல்களின் வாசலில் பின்வருமாறு போர்டு எழுதி ஒட்டியிருக்கிறார்களாம்:—

"நாய்களும் தென்னாப்பிரிக்க வெள்ளையர்களும் இந்த ஓட்டலுக்குள் வரக்கூடாது."

இதைக் குறித்துக் கராச்சி நகரத்து நாய்கள் ரொம்பவும் மனஸ்தாபப் பட்டு ஓட்டல்காரர்கள் மீது வழக்குத் தொடரப் போவதாகக் கேள்வி.

ஊரும் பேரும்

[தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்]

‘பேரைச் சொன்னாலும் ஊரைச் சொல்லக்கூடாது’ என்பது தமிழ் நாட்டின் சம்பிரதாயம். இந்தப் பழைய சம்பிரதாயத்தை உதறித் தள்ளிவிட்டு, தமிழ் நாட்டில் உள்ள அத்தனை ஊரையும் பேரையும் பற்றி ஒரு ஆராய்ச்சியே செய்து அதை ஒரு புத்தகமாகவே வெளியிடுவதென்றால் அது போற்றத் தகுந்ததுதானே!

“பெயரில் என்ன ஐயா இருக்கிறது ?” என்று வாதம் செய்பவர்களும் உண்டு. அது வாஸ்தவம்தான். சவுதாம்டன், டாங்கனீகா, வொர்சஸ்டர் ஷைர் முதலிய ஊர்ப்பெயர்களைப் பற்றி நமக்கென்ன அக்கறை? ஆனால் ஐயங்கொண்ட சோழபுரம், ஸ்ரீராம விண்ணகரம், சிவபாத சேகர மங்கலம் என்பவை போன்ற அழகான ஊர்ப் பெயர்களைக் கேட்கும்போது என்ன என்ன ஞாபகங்கள் எல்லாமோ நமக்கு ஏற்படத்தான் செய்யும்.

ஸ்ரீ ரா. பி. சேதுப்பிள்ளை தம்முடைய ‘ஊரும் பேரும்’ * என்ற புஸ்தகத்தில் தமிழ் நாட்டில் உள்ள அநேக ஊர்களின் பெயர்களையும் அலசி ஆராய்ந்து தமிழகத்தின் சரித்திரத்தையே உருவாக்கியிருக்கிறார்.

தமிழ் நாட்டில் மனிதர்களின் பெயர்களைச் சொல்வதில்தான் கோணல்கள் என்றால், ஊரின் பெயரைச் சொல்வதிலும் எத்தனை எத்தனையோ கோணல்கள் உண்டு. பத்மனுபன் ஏரி என்பதைப் ‘பதுமனேரி’ என்போம்; பைம்பொழில் என்பதைப் ‘பம்புளி’ என்போம்; ஊர் ஒக்க நின்றான் புரம் என்பதை ‘ஒக்கனுபுரம்’ என்போம். பழைய ஐயங்கொண்ட சோழபுரம் என்பதைப் ‘பழைய சங்கடம்’ என்று சொல்லவும் கூசமாட்டோம்!

‘ஹாமில்டன் பிரிட்ஜ்’ பாலம் அம்பட்டன் வாராவதியாகிப் பின்னால் பார்பர்ஸ் பிரிட்ஜ் ஆன கதை நமக்கெல்லாம் தெரிந்ததுதான். ஆனால் மயிலாடுதுறை என்ற அழகிய பெயரைத் தாங்கிய ஊர், காலடையில், மயூரபுரம் ஆகிப் பின்னால் மாயூரவரம் ஆகத் திரிந்து கடைசியில் மாயவரம் என்று நிலைத்து விடுகிறது என்பதை அறியும்போது நமக்கு ஆச்சர்யம் உண்டாகிறது. இது போலவே, ராஜராஜேச்சரம் என்பது தாராசுரம் என்று குறுகித் ‘தாராசுரம்’ என்று திரிகின்றது. மாமல்லபுரம் மகாபலிபுரம் ஆன கதையோ எல்லோருக்கும் தெரிந்ததே. இதைப்போல் எத்தனை எத்தனையோ ஊர்களின் பெயர்கள் திரிந்த காரணத்தை ஆசிரியர் எடுத்துக் கூறி நமக்கு அளவில்லா வியப்பை உண்டாக்குகிறார்.

இன்னும் சில வேடிக்கைகள்: நாமக்கல், லால்குடி என்ற ஊர்ப்பெயர்கள் எப்படி வந்தன ? ஆறைக்கல் என்று ஒரு கோட்டை; அங்கு ஒரு பெருமாள் கோவில். அங்கே உள்ள பாறையில் பெருமாளின் திருநாமம் போட்ட காரணத்தால் ஆறைக்கல் நாமக்கல் ஆகிவிடுகிறது. தவத்துறை என்பது பழைய பெயர். அங்குள்ள கோவிலின் கோபுரம் சிகப்பு நிறமுடையது. இதைப் பார்த்தார்கள் சில பாரசீக முகம்மதியர்கள். ‘இது என்ன லால்குடியா ?’ என்று கேட்டார்கள். (பாரசீக மொழியில் லால்குடியா என்றால் செப்பறை என்று பொருள்.) அந்தப் பெயரே நிலைத்து விட்டது !

பழைய தமிழகத்தை ஆண்ட அரசர்களின் வீரம், கொடை முதலியன எல்லாம், தஞ்சை தொண்டான், கடாரம் கொண்டான், முடி கொண்டான், சதுர்வேதி மங்கலம், திருச்சோற்றுத் துறை முதலிய ஊர்ப் பெயர்களின் மூலமாக விளக்க முறுகின்றது. இவ்விதமாக ஊரையும் அதன் பேரையும் வைத்துக் கொண்டே, தமிழ் நாடு, தமிழ் மக்கள், அவர்கள் வாழ்க்கை, அவர்கள் பண்பாடு முதலியவைகளைப் பற்றித் திட்டவட்டமாகக் கூற முடியும்,



ஸ்ரீ ரா. பி. சேதுப் பிள்ளை

* பிரசுரம் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர் ; விலை ரூபாய் ஐந்து.

தமிழ் நாட்டின் சரித்திரத்தையே உருவாக்க முடியும் என்று காட்டியிருக்கிறார் ஆசிரியர்.

நூலுக்கு அருமையான முகவுரை ஒன்றைத் திரு. வி. க. கொடுத்திருக்கிறார். "ஒரு நாமம், ஒருருவம், ஒன்றும் இல்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டும்" தமிழரின் பண்பாட்டை அழகாக வர்ணித்திருக்கிறார்.

ஸ்ரீ கா. பி. சேதுப்பிள்ளை சென்னை பல்கலைக் கழகத்துப் பேராசிரியர். சென்ற முப்பது ஆண்டுகளாகத் தமிழ்மொழி வளர்ச்சிக்குச் சிறந்த தொண்டு செய்து வருகிறவர். தமிழ்த் தாய்க்கு அவர் இதுகாறும் செய்திருக்கும் தொண்டுகளுக்கெல்லாம் இந்நூல் சிகரம் என்று சொல்ல வேண்டும்.

அருள் மொழிகள்

[மொழிபெயர்ப்பாசிரியர்: பொ. திரிகூட சுந்தரம் பிள்ளை; விற்பனை உரிமை: தமிழ்ப் பண்ணை, தியாகராய நகர் சென்னை; விலை: ரூ. 1-12-0]

வீரர்களுக்கெல்லாம் வீரனாகவும், ஞானிகளுக்கெல்லாம் ஞானியாகவும், அரசர்க்கரசனாகவும் வாழ்ந்த ரோமாபுரிச் சக்கரவர்த்தியான மார்க்க ஒளரேலியன் தன் ஞாபகக் குறிப்பில் குறித்து வைத்திருந்த பொன் மொழிகள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன.

ஜனகர், அசோகர், ஹர்ஷர், குலசேகர ஆழ்வார், சேரமான் பெருமான் நாயனார் முதலிய மகான்களுக்கு ஒப்பாக மார்க்க ஒளரேலியனைக் கூறலாம். அவர்கள் அரசியல் ஞானத்துடன் ஆத்ம ஞானமும் பெற்று விளங்கினர். மார்க்க ஒளரேலியனும் அரச போகத்திலிருந்தாலும் தாமரை யிலைத் தண்ணீர் போல் பற்றற்ற நிலையில் வாழ்ந்த பரம ஞானி.

கடல் கடந்த பிரதேசமாகிய ரோமாபுரிக்கும் தமிழ் நாட்டுக்கும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே நெருங்கிய தொடர்பு உண்டு. ரோமாபுரிக்கு முத்தும் பவளமும் அனுப்பித் தமிழ் மக்கள் வியாபாரம் செய்தனர். ஆகையால் ரோமாபுரிச் சக்கரவர்த்தியின் பொன் மொழிகள் நம் நாட்டு ஞான மொழிகளுடன் பெரிதும் ஒத்திருப்பதில் அதிசயம் இல்லை அல்லவா?

உயர்ந்த ஞானமும், ஒழுக்க போதமும், ஆன்ம உறுதியும் நிறைந்த இந்த அருள் மொழிகளின் மொழி பெயர்ப்பு நன்கு அமைந்திருக்கிறது. மொழி பெயர்ப்பு வாடை சிறிதும் வீசாமலிருப்பதால், மார்க்க ஒளரேலியன் தமிழிலேயே அருள் மொழிகளை எழுதினாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

ஷேக்ஸ்பியர், பெர்னார்ட்ஷா, டால்ஸ்டாய், கார்லைல் முதலிய மேல்நாட்டு அறிஞர்களின் பொன் மொழிகளும் சேர்ந்து இந்நூலுக்கு நவரத்னங்களையும் இழைத்தது போல் ஒரு விசேஷ மதிப்பை யுண்டாக்கி யிருக்கிறது.

மகரிஷி வ. வே. சு. ஐயர் அவர்கள் எழுதிய அழகிய முகவுரை இந் நூலை அலங்கரிக்கிறது. தமிழ் இலக்கிய உலகத்தில் எத்தனையோ வருஷகாலமாகச் சேவை புரிந்து வரும் அறிஞர் ஸ்ரீ திரிகூட சுந்தரம் பிள்ளையவர்களின் நூலுக்குத் தமிழகத்தின் தலைசிறந்த ஆசிரியரான மகரிஷியின் முகவுரை சேர்ந்திருப்பது சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தது போலாகும்.

காலக்ஷேபம்

ஆசை விட்டு விட்டதா?

மனைவி (கணவனிடம் சலிப்புடன்):—எனக்கு வர வர இந்த நகைகள், புடவைகள் மேல் இருக்கிற ஆசையே விட்டுப் போய் வருகிறது.

கணவன் (ஆச்சர்யத்துடன்):—என்ன இது, நிஜந்தானா?

மனைவி:—பின்னே பொய்யா சொல்றேன்? எத்தனை நாளைக்குத்தான் இந்தப் பழைய நகைகளையும் புடவைகளையும் கட்டிக்கொண்டு அழுகிறது? —என். கல்யாணபசுபதி.

ஒரே தரம்தான்!

"என் மாப்பிள்ளை ஒரே ஒரு தரம்தான் என் வீட்டிற்கு விஜயம் செய்தான்."

"அப்படியா? மிகவும் கௌரவப்பட்டவன் போலிருக்கிறது!"

"நன்றாகச் சொன்னாய்! அதற்கப்புறம் அவன் வீட்டைவிட்டு வெளியேறவேயில்லை!"

—ஜே. சகுந்தலா.

சகுனம்

ஒருவர் (ரிக்ஷாக்காரனைப் பார்த்து):—ஏய் ரிக்ஷா, வருகிறாயா?

ரிக்ஷாக்காரன்:—எங்கே போகணும், சாமி?

ஒருவர்:—புறப்படும் போதே அபசகுனம் மாதிரி எங்கே போகணும் என்று கேட்கிறாயே? —மு. சோ. இராமலிங்கம்.

புத்திசாலி?

சிப்பாய்களை டிரில் வாங்கிக் கொண்டிருக்கும்போது, இடது கால்களைத் தூக்கி நேராக நிறுத்தும்படி உத்தரவிட்டான் சார்ஜெண்ட். ஒரு சிப்பாய் தவறுதலாகத் தனது வலது காலை நீட்டினான்.

சார்ஜெண்ட் (உண்மையை யறியாமல்):—எந்த பிரகஸ்பதி இரண்டு கால்களையும் தூக்கி நின்று கொண்டிருப்பது? —"அம்பி"

நல்ல பேரம்!

புத்தகம் வாங்க வந்தவர்:—ஏங்க! இந்தக் கணக்குப் புஸ்தகம் என்ன விலை?

கடைக்காரர்:—பத்தணா.

புத்தகம் வாங்க வந்தவர்:— சொல்லிக் கொடுங்கோ ஐயா!

கடைக்காரர்:—என்ன! சொல்லித்தரவா? அதற்குக் கணக்கு வாத்தியாரிடம் போங்க!

—எம். ராமதாஸ்.



யசோதரா

ஆசிரியர்: விச்வம்பரநாத் கௌசிக்

மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

"வேலைக்காரா! ஏ, வேலைக்காரா!"

"எசமான்!"

"யார் அப்பா, இப்படிச் சத்தம் போடுகிறது?"

"பிச்சைக்காரன், எசமான்! என்ன சொன்னாலும் போக மாட்டேன் என்கிறான்."

"போகமாட்டேன் என்கிறானா?"

"ஆமாங்க, எசமான்!"

"இந்தா, இந்தக் காசை அவனிடம் கொடு" என்று கூறித் தம் பையிலிருந்து ஓரணாவை எடுத்து, வேலைக்காரன் முன்பு விட்டெறிந்தார் வீட்டின் சின்ன எசமானர்.

வேலைக்காரன் காசை எடுத்துக் கொண்டு வெளியே போனான். ஆனால் மறுகணமே திரும்பி வந்து "அவன் காசு வேண்டாம் என்கிறான்" என்றான்.

சின்ன எசமானர், "காசு வேண்டாமா? பின் என்ன வேண்டுமாம் அவனுக்கு?" என்று கேட்டார்.

"சோறுதான் வேண்டுமாம். காசு வேண்டாமாம்."

"அவன் மட்டுந்தானே வந்திருக்கிறான்?"

"இல்லீங்க, அவனோடுகூட ஒரு பெண்ணும் வந்திருக்குங்க."

"அந்தப் பெண்ணுக்கு என்ன வயசிருக்கும்?"

"பதினாறு, பதினஞ்சு இருக்கலாமுங்க,"

"அப்படியானால் இரண்டு பேருக்குச் சோறு போட வேண்டுமென்று சொல்லு."

"ஆமாங்க."

சின்ன எசமானர் சிறிது நேரம் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தார். பிறகு எழுந்து, "வா, அவனைப் போய்ப் பார்ப்போம்" என்று கூறிக்கொண்டே வாசற்புறம் வந்தார்.

சுமார் நாற்பது வயதுள்ள ஒரு பிச்சைக்காரன் கிழிந்த கந்தல் துணி உடுத்திய வண்ணம் நிற்பதையும், அவன் அருகிலேயே அழுக்கடைந்த புடவைத் துண்டு ஒன்றை அணிந்து கொண்டு கூனிக் கோணிக் கொண்டு நிற்கும் ஒரு பெண்ணையும் பார்த்தார்.

"ஏனப்பா, உனக்கு என்ன வேண்டும்?" என்று பிச்சைக்காரனைப் பார்த்துக் கேட்டார் அவர்.

"எசமான், வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்ளச் சோறு வேண்டும்" என்று வணக்கமாகப் பதில் சொன்னான் பிச்சைக்காரன்.

எசமானர் பையிலிருந்து ஒரு ரூபாயை எடுத்து வேலையாளிடம் கொடுத்து, "பனிரண்டணாவுக்குப் பூரியும், காலணாவுக்கு வேறு ஏதாவது பட்சணமும் வாங்கிக் கொண்டு வா" என்று கூறினார்.

"பனிரெண்டணாவுக்கா! அவ்வளவு எங்களாலே சாப்பிட முடியாதுங்க. எட்டணாவுக்கு வாங்கினாலே போதும்" என்று கூறினான் பிச்சைக்காரன்.

"அப்போ, எட்டணாவுக்கே வாங்கி வா, அப்பா!"

வேலைக்காரன் கடைத் தெருவுக்குப் புறப்பட்டுப் போய் விட்டான். "அதோ, அந்தக் கல்லின்மேல் உட்கார்ந்திரு. அவன் வாங்கி வந்ததும் சாப்பிடு" என்று கூறிவிட்டு உள்ளே போனார் சின்ன எசமானர்.



"எசமான்!" என்று கைகூப்பிக்கொண்டு பிச்சைக்காரன் கூப்பிட்டான்.

எசமானர் பின்னால் திரும்பி "என்ன?" என்று கேட்டார்.

"ஆண்டவன் உங்களைக் காப்பாற்றட்டும். இந்தப் பெண்ணுக்கு ஏதாவது ஒரு கிழிசல் துணி இருந்து கொடுத்தீர்களானால் உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு" என்று ஈனக் குரலில் அவன் வேண்டி நின்றான்.

எசமானர் அந்தப் பெண்ணை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார். பெண் உடுத்தியிருந்த துணி மிகவும் கிழிந்திருந்தது. அவள் தன் உடம்பை மறைத்துக் கொள்ளும் முயற்சியில் கூனிக் குறுகிக் கொண்டு பரிதாபமாக நின்று கொண்டிருந்தாள்.

பெண்ணின் உடலில் யௌவனம் பொலிவதை அவர் பார்த்தார். 'உண்மையில் இப்பெண்ணுக்கு ஒரு நல்ல துணி தேவைதான். வயது வந்த ஒரு பெண் உடல் தெரியும் படியாக இப்படி உடை உடுத்துவது சரியல்ல' என்று எண்ணி, உள்ளேயிருந்து ஒரு புதிய வெளுத்த துணியை எடுத்து வந்து, "இதைக் கட்டிக் கொள்ளச் சொல்லு" என்று கூறிப் பிச்சைக்காரனிடம் கொடுத்தார்.

பிச்சைக்காரன் அவரை வாயார வாழ்த்தி விட்டு "இதைக் கட்டிக் கொள்ளம்மா" என்று தன் பெண்ணிடம் கொடுத்தான்.

பெண் அதை உடுத்திக் கொள்ளத் தொடங்கினாள். ஆனால் "குளித்துவிட்டு உடுத்திக் கொண்டால் நல்லதப்பா" என்றாள்.

"அதோ குழாய் இருக்கிறதே, குளித்து விட்டே உடுத்திக் கொள்ளேன்" என்றான் பிச்சைக்காரன்.

பெண் குழாயடிக்குப் போய் விட்டாள். எசமானரும் வீட்டிற்குள் போய் விட்டார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு ஹரத்வாரி (வேலைக்காரன்) ஏதோ வேலையாக அவருடைய அறைக்கு வந்தான். "என் ஹரத்வாரி, அவர்களுக்கு பூரி வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து விட்டாயா?" என்று கேட்டார் எசமானர்.

"வாங்கி வந்துட்டேன். சாப்பிட்டுக் கிட்டிருக்காங்க" என்றான் ஹரத்வாரி.

எசமானர் மறுபடியும் எழுந்து வெளியே வந்து தந்தையும் மகளும் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தார்.

பெண் அவர் அளித்த அந்த வெள்ளைத் துணியை அணிந்திருந்தாள். எசமானர் பெண்ணைக் கூர்ந்து கவனித்தார். அவள் நல்ல சிவப்பு. அழகிய முகம். பெரிய கரிய விழிகள். என்ன அழகு!

'இவ்வளவு அழகிய பெண் ஒரு பிச்சைக்காரியா? கடவுளின் லீலையை என்னவென்று சொல்வது? நல்ல இடத்தில் பிறந்து, நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்டுச் சுகமாக வாழ்க்கையை நடத்த வேண்டியவள்! ஓடியாடி உல்லாசமாக இருக்க வேண்டிய வயது! இப்படித் தெருத் தெருவாகப் பிச்சைக்கு அலையக்கூடிய வயதா இது?' என்ற யோசனையில் ஆழ்ந்திருந்த அவரது உள்ளத்திலிருந்து ஒரு நீண்ட மூச்சு வெளிவந்தது.

எசமானர் இந்த யோசனையில் உழன்று வெளி வருவதற்குள், அவர்களிருவரது சாப்பாடும் முடிந்து விட்டது.

பிச்சைக்காரன் எசமானரை வாயார வாழ்த்திவிட்டுப் புறப்பட்டான். எசமானரும் இரக்கம் ததும்ப, "உனக்கு எங்கும் சாப்பாடு கிடைக்காவிட்டால் இங்கே வந்து விடு" என்று கூறி அப்பெண்ணை ஒரு தடவை பார்த்தார். அப்பெண்ணும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். இருவரது கண்களும் ஒன்றை ஒன்று சந்தித்தன. அடுத்த கணம் பெண் வெட்கித் தலை குனிந்தாள். அவரது கண்களும் அவரை யறியாமல் மூடிக்கொண்டன. அவர் கண்களைத் திறந்து பார்க்கும் பொழுது, பிச்சைக்காரன் மகளின் கையைப் பிடித்துக் கொண்டு நடக்கலானான். அவர் அவ்விருவரையும் பார்த்தவண்ணம் நின்றார். சிறிது நேரம் சென்றதும் பெண் ஒரு முறை திரும்பிப் பார்த்தாள். அவர் தன்னைக் கவனித்தவாறே நிற்கிறார் என்பதை யறிந்த அவள், சட்டெனத் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

எசமானர் மனதிற்குள் ஏதோ சிந்தித்தவாறு உள்ளே சென்றார்.

2

தந்தைக்கு அடுத்தபடியாக சாமநாத பாபுதான் வீட்டுக்கு எசமானர். அவருக்கு வயது 22-23 இருக்கலாம். இன்னும் கல்யாணம் ஆகவில்லை. பி.ஏ., பாஸ் செய்த பின்னர்தான் கல்யாணம் ஆவதாயிருந்தது. அவர் அப்பா வக்கீல். தொழிலில் அவருக்கு நல்ல வரும்படி உண்டு. அவருக்கு ஒரே ஒரு தங்கை. தாய் தந்தை இவர்களைத் தவிரக் குடும்பத்தில் வேறெவரும் இல்லை.

சாமநாத பாபுவுக்கு அப் பிச்சைக்காரப் பெண்ணின் ஞாபகம் அடிக்கடி வந்தது. அவர் அந்தச் சம்பவத்தை வெகு சாதாரணமாக எண்ணி மறக்க முயன்றார். அதுவா மறக்க முடிந்தால் தானே! அதை மறப்பதற்கு எத்தனையோ உபாயங்கள் செய்து பார்த்தார். ஒன்றும் பலனளிக்கவில்லை. திருட்டுத்தனமாக அந்தப் பெண் அவரது உள்ளத்துக்குள் புகுந்து சிந்தனையைக் கிளறி விடுவாள். இத்தனை அழகான பெண் தெருத் தெருவாகப் பிச்சை வாங்கச் சுற்றுவதா? போகும்போது கடைக் கண்ணால் என்னைப் பார்த்தாளே! ஆகா! என்ன அழகிய பார்வை! இன்னுமொரு தடவை என்னை அவள் அப்படிப் பார்த்திருக்கக் கூடாதா? தெருவில் காலடி எடுத்துவைத்த பொழுதுகூட என்னைப் பார்த்தாளே அவள்! அந்த வெள்ளைத் துணி அவளது அழகை எப்படி எடுத்துக் காட்டியது? அவள் உயர் குலத்தில் பிறந்தவளாய்த் தானிருக்க வேண்டும். தாழ்ந்த குலத்தில் பிறந்திருந்தால் இத்தனை அழகு எங்கிருந்து வரும்?—மறந்தே போய்விட்டேன். அப்பொழுதே அவர்களை 'என்ன சாதி?' என்பதைக் கேட்டிருக்க வேண்டும்! காலைக்கு வந்தால் கட்டாயம் கேட்டு விடுவோம்.



ஆம், ஆனால் அந்தப் பெண்ணும் பிச்சைக்காரனும் நாளைக்கு மறுபடியும் வருவார்களா, மாட்டார்களா? இக்கேள்விக்குப் பதில் சொல்வது யார்? பிச்சைக்காரப் பிழைப்புத்தானே! இன்றைக்கு இங்கே, நாளைக்கு அங்கே! ஆமாம், அவர்கள் எப்படிப் போனால் நமக்கென்ன? சாப்பாடு போட்டாய்விட்டது. துணி கொடுத்தாய் விட்டது. அதைத் தவிர வேறென்ன செய்வது? பிச்சைக்காரர்களுடன் நெருங்கிப் பழகுவதனால் என்ன கிடைக்கப் போகிறது?' இம்மாதிரியான யோசனையில் பிச்சைக்காரனையும் அப் பெண்ணையும் மறக்க முயலுவார். ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம், அவரறியாமலே, அவருடைய அனுமதி பெறாமலே அந்தப் பிச்சைக்காரப் பெண் அவரது மனதில் மறுபடியும் புகுந்து விடுவாள்.

பிறகு அவர் அவளது கற்பனை யுருவத்தைக் காணவும், அவளைப் பற்றிய சிந்தனையில் மூழ்கவும் ஆரம்பித்து விடுவார். சிற்சில சமயம் அவருக்குத் தம் மனது இப்படிப் பலவீன முறுவதைக் கண்டு, தம் மீதே கோபம் வரும். மனதை வேறு விஷயத்தில் திருப்ப எண்ணி, ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிக்க உட்காருவார். நாலைந்து பக்கங்கள் படித்து முடிப்பதற்குள் பக்கங்களிலுள்ள எழுத்துக்கள் மறைந்து விடும். அந்த இடத்தில், எழுத்துக்களுக்குப் பதிலாக, அந்தப் பிச்சைக்காரப் பெண் காட்சி அளிப்பாள். உடனே அவர் அப்பெண்ணின் உருவெளித் தோற்றத்தில் மயங்கி, அவளைப் பற்றிய சிந்தனையில் மூழ்கி விடுவார். திடீரென அக்கனவிலிருந்து விழித்துக் கொண்டு, தமது கையிலிருந்த புத்தகத்தை ஆத்திரத்துடன் கீழே எறிந்து விட்டு, 'நமக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்? நானோ பணக்காரன். அவளோ பிச்சைக்காரி! எனக்கு அவளைப் பற்றிய சிந்தனை எதற்கு? இன்று ஏன் என் மனம் இப்படியெல்லாம் வேலை செய்கிறது? யாராவது என்னை இந்த நிலையில் பார்த்தால் என்ன சொல்வார்கள்?' என்று தமக்குத் தாமே நினைத்துக் கொள்வார்.

இப்படிச் சில நாட்கள் சென்று விட்டன. அன்று ஒரு நாள் ராமநாத பாபு நாற்காலியில் அமர்ந்து ஆங்கிலப் பத்திரிகை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தார்.

"எசமான், அன்றைக்கு வந்த அதே பிச்சைக்காரன் இன்றைக்கும் வந்திருக்கிறான்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தான் ஹரத்வாரி.

இந்தச் சொல் காதில் விழுந்ததும், திடுக்கிட்டவராய் "அதே பிச்சைக்காரனா?" என்று கேட்டார் ராமநாத பாபு.

"ஆமாங்க!"

இதைக் கேட்டதும் பத்திரிகையை எறிந்துவிட்டு, ராமநாத பாபு எழுந்து நின்றார். ஒரு சாதாரணப் பிச்சைக்காரனையும் அவனது பெண்ணையும் பார்ப்பதற்காக, எசமானர் இவ்வளவு பரபரப் படைவதைக் கண்ட ஹரத்வாரிக்குக் கொஞ்சம் ஆச்சரியமாகத்தானிருந்தது. ஆனால் தனது ஆச்சரியத்தை அடக்கிக் கொண்டு, ஹரத்வாரி எசமானர் பின்னாலேயே சென்றான்.

பிச்சைக்காரன் கவிழ்ந்து உட்கார்ந்திருப்பதையும் அவன் அருகிலேயே கவிழ்ந்து சாய்ந்து கொண்டு அந்தப் பெண் நின்று கொண்டிருப்பதையும் அவர் கண்டார். பெண் அவரைப் பார்த்தாள். அவரும் அவளைப் பார்த்தார். இருவர் கண்களும் ஒன்றை ஒன்று சந்தித்து விட்டன. பெண் நாணத்தினால் தலை குனிந்தாள். அன்று அவர் கொடுத்த அதே துணியைத்தான் இன்றும் அவள் உடுத்தியிருந்தாள். அன்று அது வெளுப்பாயிருந்தது. ஆனால் இன்று அழுக்கேறியிருந்தது. அந்த அழுக்குத் துணியிலும் அவள் இன்று அழகாகவேதான் அவருக்குக் காணப்பட்டாள். அவரது உள்ளத்தில் கவிதைக் கடல் பொங்கி யெழுந்தது. 'சேற்றில் தாமரை என்று கூறுகிறார்களே, இதைத்தான் போலும்! அவள் உடுத்தியிருக்கும் துணி சேறு; அவளது வதனம் தாமரை! என்ன அழகான உவமை! கரு மேகங்களுக்கு நடுவே சந்திரன்! இந்த உவமைகூட இங்கு பொருந்தும் போலிருக்கிறதே!' — இம்மாதிரியான உவமைகள் தேடும் சிந்தனையில் அவரது நேரம் சென்று கொண்டிருந்தது.

"சாமி, வயிற்றுக்குச் சோறு கிடைக்கவில்லையானால் இங்கே வந்துவிடு என்று சொன்னீர்களே! இன்று எங்குமே கிடைக்கவில்லை. அதனால்தான்......" என்று இழுத்தான் பிச்சைக்காரன்.

"அப்படியா! ரொம்ப நல்லது ... டேய் ஹரத்வாரி!"

"ஏன் எசமான்?" என்று பின்னாலேயே நின்றுகொண்டிருந்த ஹரத்வாரி கேட்டான்.

"போய் ஒரு ரூபாய்க்குப் பூரியும் பக்ஷணங்களும் வாங்கி வா" என்று அவர் கூறவும், ஹரத்வாரி புன்முறுவலுடன் கடைத் தெருவுக்குப் புறப்பட்டுப் போனான்.

நியாயம்!



"பசியாக இருக்குதுங்க. ஏதாகிலும் கொடுங்க, அம்மா!"

"என்னப்பா, ஆள் வாட்ட சாட்டமாக இருக்கிறாய், பிச்சை கேட்க வந்து விட்டாயே! ஏதாகிலும் வேலை செய்து பிழைக்கக் கூடாதா?"

"வேலை செய்தால் இன்னும் ரொம்பப் பசிக்குமே, அம்மா!"

"நீ போய் உட்கார்ந்திரு. சாப்பாடு இதோ வந்து விடும்" என்று கூறிவிட்டு உள்ளே சென்று பெட்டியிலிருந்து வெள்ளைத் துணி ஒன்றை எடுத்து வந்தார். அதைப் பிச்சைக்காரனிடம் விட்டெறிந்து, "உன் பெண்ணிடம் கொடுத்து இதைக் கட்டிக் கொள்ளச் சொல்லு. அது ரொம்ப அழுக்காகப் போய் விட்டது. இரண்டு துணி இருந்தால் கொஞ்சம் சுத்தமாயிருக்கலாம்" என்று கூறினார்.

பிச்சைக்காரன் துணியைப் பெண்ணிடம் கொடுத்தான். அவள் அதை வாங்கிக் கொண்டு, குளிப்பதற்காக குழாயடிக்குப் போய் விட்டாள். ராமநாத பாபுவும் உள்ளே போய் விட்டார். சிறிது நேரத்திற்கெல்லாம் உலாத்தியவாறு வெளியே வந்தார் ராமநாத பாபு. பெண் குளித்து முடித்துப் புதுத் துணி உடுத்தியிருந்தாள். வெள்ளைத் துணி உடுத்திப் பரிசுத்தமாகத் தோற்றம் அளித்த அவளைக் கண்டு அவர் 'மேகத்தினின்றும் விடுபட்ட சந்திரனைப் போலிருக்கிறாள் இவள். சந்திரன் மேகத்தின் நடுவே சிக்குண்டிருந்தாலும் சரி, மேகத்தினின்று விடுபட்டுச் சுத்தமாயிருந்தாலும் சரி விசேஷ சோபையுடன்தான் விளங்குகிறான். அதேபோல இந்தப் பெண்ணும் அழுக்குத் துணி உடுத்தியிருந்தாலும் சரி சுத்தமான துணி உடுத்திய பொழுதிலும் சரி—அழகாகவேதான் இருக்கிறாள். அழகான வஸ்து எப்படியிருந்தாலும் அழகாகவேதானிருக்கிறது. இல்லாவிட்டால் 'அழகு' என்பதற்கு அர்த்தமே இல்லாமல் அல்லவா போய் விடும்?' என்று எண்ணினார்.

வேலைக்காரன் சாப்பாடு கொண்டு வந்து கொடுத்தான். தகப்பனும் பெண்ணும் சாப்பிட்டு விட்டுப் புறப்பட ஆயத்தமானார்கள்.

"நீ என்ன சாதி அப்பா?" என்று கேட்டார், ராமநாத பாபு.


"நாங்களா? டாகூர். ஆனால் இப்பொழுது கீழ்ச் சாதிக்கும் கேடு கெட்ட சாதியாக வாழுகிறோம். என்ன செய்வது? இதெல்லாம் காலத்தின் கோலம்!" என்றான் பிச்சைக்காரன்.

'எனது ஊகம் சரிதான். மேல்சாதியாகத்தானிருக்க வேண்டும் என்று அப்பொழுதே நினைத்தேனே!' என்று மனத்துள் சொல்லிக் கொண்டார் ராமநாத பாபு.

அவரது மனதில் எத்தனையோ கேள்விகள் எழுந்தன. ஆனால் கேட்கத் துணிவு மட்டும் ஏற்படவில்லை. பிச்சைக்காரனும் நகர்ந்து விட்டான். அவர் போய்க் கொண்டிருந்த அவர்களை உற்றுப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தார்.

(தொடரும்)

இரட்டைப் பொம்மைகள்



ராஜி

கிட்டு, பட்டு என்று பெயருள்ள இரண்டு இரட்டைப் பொம்மைகள் இருந்தன. அவை இரண்டும் இரட்டைக் குழந்தைகள். ஆகையால் இரண்டு பொம்மைகளும் ஒரே மாதிரி இருந்தன. கிட்டுவும், பட்டுவும் சேர்ந்து நின்று விட்டால் அவைகளின் தாயாருக்கு யார் கிட்டு-யார் பட்டு என்பது தெரியாது. கிட்டு விஷமம் செய்தால் அதன் தாயார் கிட்டுவை அடிக்கப் போவாள். அப்பொழுது பொம்மைக் கிட்டு "அம்மா, என்னை அடிக்காதே. நான் கிட்டு அல்ல. நான் பட்டு" என்று சொல்லும். கிட்டுவை அடிக்க வந்த தாயார் ஒன்றும் தோன்றாமல் திகைத்து நிற்பாள். உடனே பட்டுவை அடிப்பதற்காக நெருங்கினால், பட்டு "என்ன அம்மா இது! என்னைத் தெரியவில்லையா? நான் பட்டு; கிட்டு இல்லை" என்று சொல்லும். "இது என்ன சங்கடம்! தவறி கிட்டு என்று நினைத்துப் பட்டுவை அடித்து விட்டால் என்ன செய்வது?" என்று அவைகளின் தாய் வாயை மூடிக் கொண்டு பேசாமலிருப்பாள்.

இப்படியாக இரண்டு பொம்மைகளும் அவைகளின் தாயாரிடம் அடிபடாமல் விஷமங்கள் செய்து தப்பித்துக் கொண்டே வந்தன. நாளுக்கு நாள் குழந்தை பொம்மைகளின் விஷமம் அதிகரித்துக் கொண்டே வந்தது. வீட்டில் எந்த விளையாட்டுச் சாமான்கள் வாங்கி வந்தாலும் இரண்டு பொம்மைக் குழந்தைகளும் உடைத்து விடும். யார் உடைத்தது என்று கண்டு பிடிக்க முடியாததால் இரண்டு பொம்மைக் குழந்தைகளும் தப்பித்துக் கொண்டு விடும். வீட்டில் என்ன பக்ஷணங்கள் செய்தாலும் இரண்டு பொம்மைக் குழந்தைகளும் தின்று விட்டுப் பேசாமலிருந்து விடும்.



ஒரு நாள் தாயார் குழந்தைகளுக்காக நல்ல ஜிலேபி பண்ணியிருந்தாள். அந்த ஜிலேபியைக் கொஞ்சம் வாயில் போட்டுக் கொண்டவுடன், இரண்டு பொம்மைக் குழந்தைகளுக்கும் நிறையத் தின்ன வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. தாயார் இந்த விஷயத்தை முன்னாலேயே நன்கு அறிந்து பக்ஷணங்களைச் சமையலறையில் வைத்து சமையலறைக் கதவுகளை நன்றாகப் பூட்டி விட்டு வெளியே போனாள்.

தாயார் வெளியில் சென்றவுடன், இரண்டு பொம்மைக் குழந்தைகளும் எப்படியாவது சமையலறையில் சென்று ஜிலேபியைத் தின்ன வேண்டும் என்று ஆசைப்பட்டன. "அப்படி நாம் அகப்பட்டுக் கொண்டால் தப்பித்துக் கொண்டு ஓடி விடலாம். ஒரு வேளை நாம் பிடிபட்டால் நம்முடைய பெயரை மாற்றி அம்மாவை ஏமாற்றி விடலாம்" என்று பேசிக் கொண்டன.

சமையலறைக்குப் போவதற்கு வழி ஒன்றுமில்லை. சமையலறைக்கு மேலே திறந்திருக்க ஜன்னல் வழியாக உள்ளே குதிக்கலாம். அந்த ஒரு வழிதான். அந்த வழியாகக் குதிக்கலாம் என்று ஜன்னலின் அருகில் சென்றன. அவை

களின் அதிர்ஷ்ட வசமாக அறையின் உள் பக்கமாக ஒரு நீண்ட கயிறு ஜன்னலில் கட்டப்பட்டிருந்தது. இந்தக் கயிற்றைப் பிடித்துக் கொண்டே ஒருவர் பின் ஒருவராக உள்ளே இறங்கி விடலாம் என்று நிச்சயித்தன.

முதலில் கயிற்றைப் பிடித்துக் கொண்டே கிட்டு பொம்மை இறங்க ஆரம்பித்தது. அதைப் பின் தொடர்ந்தே பட்டு பொம்மையும் இறங்க ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் அவைகளின் கால்கள் எதன் மீதோ படுவது போல் தோன்றியது. அடுத்த நிமிஷத்தில் அவைகள் இரண்டும் ஒரு பீப்பாயில் இருந்தன. அப்பொழுது அவைகளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஏன் என்றால், எதிரில், அவைகளின் தகப்பனார் பொம்மை நின்று கொண்டிருந்தது! இரண்டு குழந்தைகளுக்கும் தூக்கி வாரிப் போட்டது!

"குழந்தைகளே! உங்களைப் பிடிப்பதற்காகவே நான் சமையலறையில் ஒளிந்து கொண்டிருந்தேன். நீங்கள் இறங்கும்போது உங்கள் இருவரையும் சேர்த்தாற்போலப் பிடிப்பதற்காகவே, கயிற்றிலிருந்து இறங்கும் சமயத்தில் பீப்பாயை அடியில் வைத்தேன். இப்பொழுது நீங்கள் ஒரே சமயத்தில் அகப்பட்டதினால், நான் பட்டு இல்லை - நான் கிட்டு இல்லை என்று தப்பித்துக் கொள்ள முடியாது — எங்கே இரண்டு பேரும் கையை நீட்டுங்கள்! இந்தப் பிரம்பினால் ஒரு அடி அடிக்கிறேன்" என்று சொல்லிற்று. பட்டு "நான் பட்டு இல்லை. கிட்டு!" என்று சொல்லிற்று. உடனே கிட்டு "நான் தான் கிட்டு - பட்டு இல்லை" என்று சொல்லிற்று. "உங்களில் யார் கிட்டுவானாலும் சரி, அல்லது யார் பட்டுவானாலும் சரி - இரண்டு பேருக்கும் தான் அடி" என்று சொல்லிற்று தகப்பனார் பொம்மை. ஆனால் குழந்தைகளுக்கு அடி விழவில்லை; பதிலாக ஆளுக்கு ஒரு ஜிலேபி கிடைத்தது. அன்று முதல் இரண்டும் விஷமம் செய்யாமல் ஒழுங்காக இருந்தன.


"லக்ஸ் டாய்லட் சோப்பால் தினமும் நான் அழகுபடுத்திக்கொள்ளும் முறை இதுவே" என்று புஷ்பவல்லி சொல்கிறார்
LUX TOILET SOAP
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையை தாராளமாக சருமத்தின் மேல் தடவுகிறேன்...
சுத்தமான, குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறேன்...
பின்பு, உலர்ந்த மிருதுவான துண்டினால் முகத்தை துடைக்கிறேன்
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்
LTS. 139-23-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED


SUNSHINE
Glaxo
ஸன்ஷைன் கிளாக்ஸோ
இந்தியாவில் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :
எச். ஜே. பாஸ்டர் அண்ட் கோ., லிட்.
பம்பாய் - கல்கத்தா - மதராஸ் - லாகூர்
குழந்தைகளை
புஷ்டியாக
வளர்க்கிறது


சகலவிதமான வலிகளும் மாயமாய்
மறைந்து விடும்!
ஸாரிடோன்
மாத்திரைகள் சாப்பிட்ட
பத்தே நிமிஷங்களில்



..ed, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
..116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



ALKI ஜூலை 14, 1946 4 அணா

Regd. No. M. 4392

